18.05.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**குமரி மாவட்டத்தில் கனமழை**

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் இடைவிடாது கொட்டி தீர்க்கும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. அணை மற்றும் குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.குமரி மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் மாலை தொடங்கிய மழை நேற்று இரவு வரையிலும் நீடித்தது. பகலில் வெளிச்சம் குறைவாக காணப்பட்டது. விடாது பெய்த மழையால் ரோடுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு வாகன ஓட்டிகள் சிரமப்பட்டனர். கன்னியாகுமரி அருகே கொட்டாரத்தில் அதிக பட்சமாக 125.8 மி.மீ. மழை பதிவானது. தொடர்மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. குழித்துறை தாமிரபரணி மற்றும் சுசீந்திரம் பழையாற்றில் தண்ணீர் கரை புரண்டு ஓடுகிறது. பேச்சிப்பாறை அணைக்கு 729 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. தொடர்ந்து பெய்யும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. நேற்று ரோடுகளில் மக்கள் நடமாட்டம் குறைவாக இருந்தது. பஸ்களில் கூட்டம் இல்லை. கோடை விடுமுறையை கொண்டாட வெளியூர்களில் இருந்து கன்னியாகுமரி வந்த சுற்றுலா பயணிகள் அறைகளில் முடங்கி கிடந்தனர். நேற்று இரவிலும் மழை தொடர்ந்தது. மாவட்டத்தில் இதமான காலநிலை நிலவுகிறது.

**ஊட்டியில் மலர் கண்காட்சி நிறைவு**

ஊட்டி: நீலகிரி மாவட்டம், ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், 15ம் தேதி துவங்கிய மலர் கண்காட்சி, நேற்று மாலை நிறைவு பெற்றது. நிறைவு விழாவில், சிறந்த மலர் தோட்டங்கள், காட்சி அரங்குகளுக்கு, பரிசுகள் வழங்கப்பட்டன. சிறந்த தோட்டத்திற்கான, கவர்னர் சுழற்கோப்பை, வெலிங்டன் ராணுவப்பயிற்சி கல்லூரிக்கும், சிறந்த மலர் காட்சிக்கான, முதல்வர் சுழற்கோப்பை, ஊட்டி ஸ்டெர்லிங் பயோ டெக்

நிறுவனத்துக்கும் வழங்கப்பட்டன. பல்வேறு தனியார் தோட்டங்களுக்கு, 52 சுழற் கோப்பைகள் வழங்கப்பட்டன. சிறந்த தனியார் தோட்டங்களுக்கு இடையே நடந்த போட்டியில், 182 பேர் பங்கேற்றனர். இதில், 88 பேருக்கு முதல் பரிசு, 82 பேருக்கு இரண்டாம் பரிசு, எட்டு பேருக்கு மூன்றாம் பரிசும் வழங்கப்பட்டன.

**வத்தல் விலை உயர்வு**

ஆர்.எஸ்.மங்கலம்: ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலத்தில் நடந்த மிளகாய் சந்தைக்கு 100 குவிண்டால் (குவிண்டால்: 100 கிலோ)குண்டு மிளகாய் வத்தல் விற்பனைக்கு வந்தன. கடந்த வாரம் குவிண்டால் ரூ. 7 ஆயிரத்து 500க்கு விற்ற, முதல் தர பெரிய குண்டு வத்தல் ரூ.8000க்கு விற்றது. ரூ. 5000க்கு விற்ற 2ம் தர சிறிய குண்டு வத்தல் குவிண்டாலுக்கு ரூ.700 விலை உயர்ந்து குவிண்டால் ரூ.5 ஆயிரத்து 700க்கு விற்றது.

**கள்ளக்குறிச்சியில் பெய்த மழையால் செழித்து வளர்ந்துள்ள எள் பயிர்கள்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த மழையால் எள் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி மற்றும் சுற்று வட்டார பகுதியில் கோடைக்கால பயிராக இறைவையில் எள் சாகுபடி செய்யப்படுகிறது. கிணற்று பாசனத்தை நம்பி பயிரிடப்படும் குறுகிய கால பயிரான எள் விவசாயிகளுக்கு அதிக லாபம் ஈட்டித்தரும் பயிராக உள்ளது.நிலத்தடி நீர்மட்டம் குறைந்து போதிய நீர் ஆதாரமின்றி காணப்பட்டாலும், கிடைத்த நீரினை பயன்படுத்தி கள்ளக்குறிச்சி அடுத்த புக்கிரவாரி, வரதப்பனூர், பெரியசிறுவத்தூர், தென்கீரனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் பலர், எள் பயிரிட்டு பராமரித்து வந்தனர். கடந்த இரு மாதமாக நிலவிய கடும் வறட்சியால் நிலத்தடி நீர் மட்டம் முற்றிலும் குறைந்து பயிர்கள் போதிய நீராதமின்றி கருகும் சூழ்நிலை ஏற்பட்டது. கடந்த சில நாட்களுக்கு முன்பு அவ்வப்போது பெய்த பலத்த மழை, விவசாயிகளை மகிழ்ச்சியடைய செய்துள் ளது. தற்போது எள் செடிகள் நன்கு செழித்து வளர்ந்து அதிக பூக்கள், காய்களுடன் பசுமையாக காட்சியளிக்கிறது. கள்ளக்குறிச்சி

மார்கெட் கமிட்டியில் எள் விலை அதிகரித்து வருகிறது. குறுகிய கால பயிராக கோடையில் எள் சாகுபடி செய்த விவசாயிகள் கூடுதல் மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

## பாகற்காய் சாகுபடி விவசாயிகள் ஆர்வம்

கச்சிராயபாளையம்: கச்சிராயபாளையம் பகுதியில் பாகற்காய் சாகுபடியில், விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கச்சிராயபாளையம் சுற்றியுள்ள பகுதியில் நெல், கரும்பு, வாழை, பருத்தி, மக்காசோளம் போன்ற பயிர்களை விவசாயிகள் பெருமளவில் சாகுபடி செய்து வந்தனர். தற்போது இப்பகுதி விவசாயிகள் கத்தரி, பாகை உள்ளிட்ட காய்கறிகள் மற்றும் கீரை வகைகள் பயிர் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மட்டப்பாறை கிராமத்தில் நவீன துல்லிய பண்ணையம் முறையில் பந்தல் அமைத்து பாகற்காய் சாகுபடி செய்துள்ளனர். பாகற்காய் நடவு செய்த 40வது நாளிலிருந்து காய்கள் அறுவடை துவங்குகிறது. செடியின் ஆயுட்காலமான 90 நாட்களில், 40 வது நாளிலிருந்து 80வது நாள் வரையில், 40 முறை காய்கள் அறுவடை செய்யப்படுகிறது. இதில் ஏக்கருக்கு 15 டன் முதல் 18 டன் வரை மகசூல் கிடைப்பதால், அதிக லாபம் கிடைக்கிறது. மேலும் வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் தோட்டத்திற்கு நேரில் வந்து பாகற்காய்களை வாங்கிச் செல்வதால் கூடுதல் லாபம் கிடைப்பதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

## ரூ. 1.40 கோடிக்கு மஞ்சள் வர்த்தகம்

திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், 2,500 மூட்டை மஞ்சள், 1.40 கோடி ரூபாய்க்கு விற்பனையானது.திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி, மஞ்சள், நிலக்கடலை, எள், ஆமணக்கு உள்ளிட்ட விவசாய உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது.மஞ்சள் வகைகள், தர்மபுரி மாவட்டம் அரூர், பொம்முடி, ஈரோடு மாவட்டம் பவானி, அந்தியூர், சேலம் மாவட்டம் ஜலகண்டாபுரம், நங்கவள்ளி, மேட்டூர், ஆத்தூர், தம்மம்பட்டி, மலையாளபட்டி, பெரம்பலூர், துறையூர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து

விற்பனைக்கு வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம், நடந்த ஏலத்தில், விரலி ரகம், குவிண்டாலுக்கு, அதிக பட்சம், 9,699, குறைந்த பட்சம், 6,338 ரூபாய்க்கும், கிழங்கு மஞ்சள், அதிக பட்சம், 7,819, குறைந்த பட்சம், 6,488 ரூபாய்க்கும் ஏலம் போனது.அதேபோல், பனங்காலி ரகம், அதிக பட்சம், 18 ஆயிரத்து, 699, குறைந்த பட்சம், 7,777 ரூபாய்க்கு ஏலம் போனது. மொத்தமாக, ஒரே நாளில், 2,500 குவிண்டால் மஞ்சள், 1.40 கோடி ரூபாய்க்கு ஏலம் போனது.

## சீஸன் துவங்கியதால் மக்கள் ஆர்வம்; நாமக்கல்லில் புதுக்கோட்டை பலா பழம்

நாமக்கல் : கொல்லிமலையில் பலா பழம் சீஸன் துவங்க, இரண்டு வாரம் உள்ள நிலையில், புதுக்கோட்டையில் இருந்து பலா பழம், நாமக்கல்லில் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் பலா பழம் அதிக அளவில் உற்பத்தியாகிறது. வைகாசி கடைசி வாரத்தில் இருந்து, ஆடி மாதம் வரை, மூன்று மாதங்களுக்கு சீஸன் இருக்கும். கொல்லிமலைக்கு நாளுக்கு நாள் சுற்றுலா பயணிகளின் வரத்து அதிகரித்துள்ளது.அதனால், சீஸன் நேரங்களில், மலைக்கு வரும் சுற்றுலா பயணிகள் தவறாமல், பலா பழத்தை வாங்கி செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். அதற்கு காரணம், அரிய வகை மூலிகை செடிகள் நிறைந்துள்ள கொல்லிமலையில், உற்பத்தி செய்யப்படும் பலா பழம் மிகுந்த சுவை இருப்பதே.இந்நிலையில், இன்னும் சீஸன் துவங்க, இரண்டு வாரம் உள்ள நிலையில், புதுக்கோட்டை மாவட்டம், ஆவனம் கைகாட்டியில் இருந்து, விற்பனைக்காக பலா பழம் அதிக அளவில், நாமக்கல் பகுதியில் குவித்து வருகின்றனர். இந்த பழம் கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. அந்த பழங்களை பொதுமக்கள் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர். இது குறித்து பலா பழம் வியாபாரி மாதேஸ்வரன் கூறியதாவது:புதுக்கோட்டை மாவட்டம், ஆவனம் கைகாட்டி, மாங்காடு ஆகிய பகுதிகளில் அதிக அளவில் பலாப்பழம் உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு, கார்த்திகை மாதம் சீஸன் துவங்கி, ஆடி மாதம்

வரை, ஒன்பது மாதம் நீடிக்கும். இந்த பழம் ருசியாக இருப்பதால், மக்கள் அதிகம் வாங்கி சுவைக்கின்றனர்.ஒரு நாளைக்கு, 200 கிலோ வரை விற்பனையாகிறது. ஒரு கிலோ, 50 மற்றும், 80 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## மழையால் காய்கறி முன்கூட்டியே அறுவடை; விலை சரியும் என எதிர்பார்ப்பு

ஊட்டி : நீலகிரியில் தொடரும் மழையால், விவசாயிகள் காய்கறியை முன்கூட்டியே அறுவடை செய்து வருகின்றனர். இதனால், மலை காய்கறி விலை சரியும் நிலை ஏற்பட்டுள்ளது.நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி ஆகிய இடங்களில், ஏப்ரல் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது. மாவட்டத்தில், 6,000 எக்டர் பரப்பளவில் காய்கறி பயிரிடப்பட்டுள்ளது.அடி வாங்கியது கார்போகம் : நீலகிரி விவசாயிகள் மார்ச் மாதம், கார்போக சாகுபடியில் ஈடுபட்டனர். இங்கு வழக்கத்துக்கு மாறாக பெய்து வரும் அதிக மழையால், பயிர்கள் அழுக துவங்கியுள்ளன. இதனால் காய்கறியை முன்கூட்டியே அறுவடை செய்யும் பணியில், விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.ஊட்டி எல்லநள்ளி விவசாயி மூர்த்தி கூறுகையில், “மழையால், உருளைக் கிழங்கு, கேரட், பீன்ஸ் போன்றவை அழுக துவங்கியுள்ளன; நஷ்டத்தை தவிர்க்க, முன்கூட்டியே அறுவடை செய்ய துவங்கியுள்ளோம்,” என்றார்.விவசாயி விசுவநாதன் கூறுகையில், “நீலகிரி காய்கறி, மேட்டுப்பாளையம், சென்னை உட்பட பல இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. முன்கூட்டியே அறுவடை நடப்பதால், சந்தைக்கு காய்கறி வரத்து அதிகரிக்கும்; இதனால், விலை சரியும். மழை நீடித்தால், விவசாயிகளுக்கு மேலும் பாதிப்பு ஏற்படும்,” என்றார்.கூடுதல் சிக்கல் : ஊட்டி மொத்த காய்கறி வியாபாரிகள் சிலர் கூறுகையில், 'சமவெளி பகுதிகளிலும், வழக்கத்தை விட கூடுதல் மழை பெய்வதால், பெங்களூரு, மைசூரு, தாளவாடி பகுதிகளின் காய்கறி வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளது. மலை காய்கறியை விட சமவெளி பிரதேச காய்கறி, விலை மலிவாக கிடைப்பதால், மலை காய்கறி விலையில் அடி விழும்' என்றார்.

## 'மரக்கன்று நடுவதை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்'

ஊட்டி : 'மரக்கன்று நடுவதை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்' என, மலர் கண்காட்சி நிறைவு விழாவில் தெரிவிக்கப்பட்டது.

ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில், 119வது மலர் கண்காட்சி நேற்று நிறைவு பெற்றது. காலை முதல் இசை கச்சேரி, மாஜிக் ஷோ உட்பட பல்வேறு பொழுது போக்கு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மழை பெய்து, பூங்கா புல்தரை முழுவதும் சேறு நிறைந்து இருந்தது, அதை பொருட்படுத்தாமல், நடனமாடியும், விளையாடியும் சுற்றுலா பயணிகள் பொழுது போக்கினர். பின், ஹெப்ரான் பள்ளி சார்பில், இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள், இசை நிகழ்ச்சி நடத்தினர்.மாலை, 3:30 மணிக்கு நிறைவு விழா நடந்தது. மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி வரவேற்றார். மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பேசுகையில், “பசுமை, இதமான காலநிலையை காக்க வேண்டும் என்ற நோக்கில் தான், 33 சதவீத காடுகள் இருக்க வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.நீலகிரியில், பசுமையை பாதுகாக்க வேண்டும்; பசுமையை அதிகரிக்க செய்ய வேண்டும்; மரக்கன்றுகள் நடுவதை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும்,” என்றார். எம்.பி.,க்கள் அர்ஜூனன், கோபாலகிருஷ்ணன், 'தாட்கோ' தலைவர் கலைச்செல்வன், ஊட்டி எம்.எல்.ஏ., புத்திச்சந்திரன், மாவட்ட ஊராட்சி தலைவி மேனகா ஆகியோர் முன்னிலை வகித்து பேசினர்.

## மஞ்சூரில் பயிர் கடன்

மஞ்சூர் : முள்ளிகூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில், 25 லட்சம் ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டது.மஞ்சூர் அடுத்துள்ள முள்ளிகூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கான பயிர் கடன் வழங்கும் நிகழ்ச்சி வங்கியில் நடந்தது. வங்கி செயலாளர் ராஜகோபால் வரவேற்றார். வங்கி நிர்வாக குழு தலைவர் கிருஷ்ணராஜ் தலைமை வகித்தார்.தொடர்ந்து, கூட்டு

பொறுப்பு குழுக்களுக்கு, 9 லட்சம் ரூபாய், விவசாய பயிர் கடனாக, 16 லட்சம் ரூபாய் என மொத்தம், 25 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டது. துணைத்தலைவர் கோபால், நிர்வாக குழு உறுப்பினர்கள் விஜயகுமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

## குன்னூரில் தொடரும் மழையால் லாஸ் நீர்வீழ்ச்சியில் ரம்மியம்

குன்னூர் : குன்னூரில் மழையின் காரணமாக லாஸ் நீர்வீழ்ச்சியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது.குன்னூரில் மேட்டுப்பாளையம் சாலையில், 7 கி.மீ., தொலைவில் லாஸ் நீர் வீழ்ச்சி உள்ளது. வனப்பகுதிக்கு இடையே உள்ள இந்த நீர்வீழ்ச்சியில், பார்த்து ரசிக்கலாமே தவிர குளிக்க முடியாது. சுற்றிலும் ராட்சத பாறைகள் சூழ்ந்த நிலையில், நடுவில் இரு இடங்களில் கொட்டும் நீர்வீழ்ச்சிக்கு செல்ல மேட்டுப்பாளையம் சாலையில் இருந்து ஒரு கி.மீ., துாரம் வனப்பகுதிக்கு இடையே செல்ல வேண்டும்.தற்போது, குன்னுார் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் கன மழை பெய்து வரும் நிலையில், இங்குள்ள நீர்வீழ்ச்சியில், வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதன் கீழ் பகுதியில் உள்ள ஆற்றிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. இந்த நீர்வீழ்ச்சி அருகே நின்று, சுற்றுலா பயணிகள் போட்டோக்களை எடுத்து செல்கின்றனர்.

## குளித்தலையில் அதிக மழை

கரூர்: கரூர் மாவட்டத்தில், நேற்று காலை நிலவரப்படி, குளித்தலையில் அதிகபட்ச மழை பெய்துள்ளது. கரூர் மாவட்டத்தில், நேற்று காலை வரை பெய்த மழையளவு விவரம் வருமாறு: அதிக பட்சமாக குளித்தலையில், 39 மி.மீ., மழையும், குறைந்தளவாக கிருஷ்ணராயபுரத்தில், 2.30 மி.மீ., மழையும் பெய்துள்ளது. அரவக்குறிச்சியில், 5, க.பரமத்தியில், 5, மாயனூரில், 2.20, கரூரில், 34, அணைப்பாளையத்தில், 17, தோகமலையில், 6, பஞ்சப்பட்டியில், 11.40, கடவூரில், 4.20 மி.மீ., மழை பெய்துள்ளது. மயிலம்பட்டியிலும், பாலவிடுதியிலும் மழை இல்லை. கரூர் மாவட்டத்தில், 126.10 மி.மீ., மழை பெய்துள்ளது. சராசரியாக, 10.51 மி.மீ., மழை பதிவாகியுள்ளது.

## முருங்கைக்காய் விலை ஒரே நாளில் ரூ.10 அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம் : தொடர் மழை காரணமாக வரத்து குறைந்து விட்டதால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் ஒரே நாளில் கிலோவுக்கு ரூ.10 அதிகரித்து ரூ.47 க்கு விற்றது.

ஒட்டன்சத்திரம் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ந்து கோடை மழை பெய்து வருகிறது. முருங்கை மரங்கள் நிறைந்த பகுதியில் மழைநீர் தேங்கி உள்ளது. இதனால் விளைந்த முருங்கைக் காய்களை விவசாயிகள் பறிக்கத் தாமதம் ஏற்படுகிறது. குறைந்த அளவிலான முருங்கைக்காய் மட்டுமே மார்க்கெட்டிற்கு அனுப்பப்படுவதால் வரத்து வெகுவாக குறைந்துவிட்டது. வியாபாரிகளின் கொள்முதலுக்கு ஏற்ப முருங்கைக்காய் இல்லாததால், விலை "கிடுகிடு' வென அதிகரித்தது. கடந்த வாரம் ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.32 க்கு விற்றது. கடந்த வெள்ளியன்று விலை ரூ.37 ஆக இருந்தது. வார விடுமுறைக்கு பின்பு நேற்று மார்க்கெட் செயல்பட்டது. ஆனால் மழை பெய்ததால் எதிர்பார்த்த அளவிற்கு காய்கள் வரத்து இல்லை. இதனால் ஒரே நாளில் முருங்கை விலை கிலோவுக்கு ரூ.10 வரை அதிகரித்து, ரூ.47 ஆனது. தொடர்ந்து மழை பெய்தால் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.இதேபோல சின்ன வெங்காயம் நேற்று அதிகபட்சமாக ரூ.37க்கு விற்றது. இது இதற்கு முந்தைய விலையை காட்டிலும் கிலோவிற்கு ரூ.11 அதிகரித்துள்ளது.

## மீண்டும் மழை

திண்டுக்கல் : திண்டுக்கல்லில் மீண்டும் நேற்று மாலை முதல் விடிய விடிய மழை பெய்தது.திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் பல இடங்களில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஒரு மணி முதல் மறுநாள் காலை 10 மணி வரை மழை பெய்தது. இதில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டு, பல கிராமங்களில் வீடுகள், வயலில் வெள்ளம் சூழ்ந்தது. நேற்று பகலில் வெயில் அடித்தது. மாலை 4 மணி முதல் மீண்டும் மழை துவங்கியது. இதனால் திண்டுக்கல் இந்திராநகர், கக்கன்நகர், திருமலைச்சாமிபுரம் உட்பட பல பகுதிகளில் மழைநீர் தேங்கியது.

**மல்லிகை செடிகளில் மொட்டுக்கள் அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி! வராது வந்த கோடை மழையால் வருவாய் அதிகரிக்க வாய்ப்பு**

ஆண்டிபட்டி : கோடை மழையால் மல்லிகை செடிகளில் மொட்டுக்கள் அதிகரித்துள்ளது. இதனால் மகசூல் அதிகம் கிடைக்கும் என்பதால் மல்லிகை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் கன்னியப்பபிள்ளைபட்டி, கொத்தப்பட்டி, கோத்தலூத்து, கதிர்நரசிங்கபுரம், டி.ராஜகோபாலன்பட்டி, டி.சுப்புலாபுரம் உட்பட பல பகுதிகளில் மல்லிகை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மல்லிகை செடிகள் கோடை காலத்தில் அதிக பூக்களை கொடுக்கும். கடந்த சில ஆண்டுகளாக கோடையில் ஏற்பட்ட தண்ணீர் தட்டுப்பாடு மல்லிகை சாகுபடியை பாதிப்படையச்செய்துவிட்டது. விவசாய நிலங்களில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால் மகசூல் பாதிப்படைந்தது. இந்த ஆண்டு கோடையின் துவக்கத்தில் இருந்து தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் மல்லிகை செடிகள் செழித்து வளர்ந்து அதிகப்படியான மொட்டுக்கள் அரும்பி வருகிறது. மழைக்கான சூழல் மாறி வெயில் அதிகரித்தால் பூக்களின் மகசூல் மேலும் அதிகரிக்கும் என்பதால் மல்லிகை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

மாயாண்டிபட்டி விவசாயி ராசு கூறியதாவது: இந்த ஆண்டு கோடையின் தாக்கம் விவசாயத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அக்னி வெயிலால் செடிகள் காய்ந்துவிடும். கடந்த காலங்களில் தண்ணீர் தட்டுப்பாட்டால் செடிகளை பராமரிக்க முடியாமல் மகசூல் பாதித்தது. தற்போதுள்ள சூழல் மல்லிகை விவசாயத்திற்கு சாதகமாக உள்ளது. பூக்களின் விலையும் கிலோ நூறு ரூபாய் வரை கிடைக்கிறது. ஒரு ஏக்கரில் 50 கிலோ வரை தொடர்ந்து 15 நாட்கள் பூக்கள் எடுக்கலாம். ஒரு மாதத்திற்கு பின் மீண்டும் பூக்கள் வந்து விடும். படிப்படியாக மழை குறைந்தால் மல்லிகைக்கு ஏற்ற காலநிலை நிலவும். இதன் மூலம் அதிக சாகுபடி எடுக்கலாம், என்றார்.

## மாவட்டத்தில் தொடருது மழை

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் கடந்த இருவாரமாக கோடை மழை பெய்து வருகிறது. இதனால் கண்மாய்கள், ஆறுகளில் நீர்வரத்து துவங்கியுள்ளது.நேற்று காலை 8.30 மணிப்படி மழையளவு (மி.மீ.,): விருதுநகர் 16, திருச்சுழி 16, அருப்புக்கோட்டை 7.3, ஸ்ரீவில்லிபுத்தூர் 9, சாத்தூர் 9, காரியாபட்டி 5.8, சிவகாசி 9.2, வத்திராயிருப்பு 3, பிளவக்கல் அணை 6.4, கோவிலாங்குளம் 6.6. நேற்று மாலையில் மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்தது.

## தொடரும் கோடை மழை ; உயரும் நிலத்தடி நீர்

ராமநாதபுரம் : கடந்த 2 வாரங்களாக தொடரும் கோடை மழையால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

தமிழகத்தில் கத்தரி வெயில் மே 4ல் துவங்கி மே 29ம் தேதி வரை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. கத்தரி வெயிலின் கோர தாண்டவத்தை எதிர்கொள்ள மக்கள் இருந்தனர். மழை பெய்தால் கத்தரி வெயிலில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என நினைத்தனர். மக்களின் நம்பிக்கை வீண்போக வில்லை. கத்தரி வெயில் துவக்க நாளான மே 4ல் வருண பகவான் மனம் இறங்கி வான் மழை பொழிந்ததால் வெயிலின் தாக்கம் குறைந்தது. கடந்த 2 வாரங்களாக லேசானது முதல் மிதமான மழை பெய்து வருகிறது. நேற்று காலை முதல் மேக மூட்டத்துடன் நிலவிய வானிலை மதியம் 1.45 மணிக்கு மழை பெய்தது. தொடர்ந்து பெய்த மழையால் பல இடங்களில் தண்ணீர் தேங்கியது. பவுண்டு கடைத்தெரு, தலைமை தபால் அலுவலக ரோடு, அரண்மனை, ரோமன் சர்ச், வண்டிக்காரத் தெரு, கேணிக்கரை, பாரதி நகர் உள்ளிட்ட பல இடங்களில் தண்ணீர் தேங்கியது. உச்சிப்புளி, பெருங்குளம், குயவன்குடி, ஆர்.எஸ்.மடை, பேராவூர், ஆர்.காவனூர், கார்குடி, அச்சுந்தன்வயல் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள சிறு கண்மாய்கள், ஊரணிகள், குளங்கள் நிரம்பி வருகின்றன. இதனால், நடப்பாண்டு நெல் விளைச்சல் போதிய மகசூல் தரும் என விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

## விவசாய நிலத்தில் மரக்கன்று நடவு

கல்லல் : கல்லல் ஒன்றியத்தில் தேசிய எண்ணெய்வித்து மற்றும் எண்ணெய் பனை இயக்கம் திட்டத்தின் கீழ், புரண்டியில் உள்ள விவசாய நிலங்களில், புங்கம் மரக்கன்றுகள் நடவு பணியை, வேளாண் இணை இயக்குனர் குருமூர்த்தி துவக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ் புங்கம் மரக்கன்று நடவு செய்யும் விவசாயிக்கு, ஒரு எக்டேருக்கு 50 சதவீத மானியமாக ரூ.20 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. துணை இயக்குனர் அழகப்பன், கல்லல் உதவி இயக்குனர் கணேசன் பங்கேற்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தமிழகத்தின் சில இடங்களில் மழை வாய்ப்பு

தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை கன மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவல்: லட்சத்தீவுகள், கேரள கடற்கரையை ஒட்டி உருவாகியிருந்த வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி, அதே இடத்தில் நீடிக்கிறது.

இந்த சுழற்சியின் காரணமாக தமிழகத்தின் உள்மாவட்டங்களின் சில இடங்களில் கன மழை பெய்யும். பிற இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் நாகர்கோயிலில் 110 மி.மீ. மழை பெய்துள்ளது. பொன்னேரியில் 90 மி.மீ. மழையும், கீரனூர், வேதாரண்யத்தில் 80 மி.மீ. மழையும் பெய்துள்ளது. இதேபோல, திருச்சி, மயிலாடுதுறை (70 மி.மீ.), பேச்சிப்பாறை, குழித்துறை (60 மி.மீ.), கிருஷ்ணகிரி, சின்னக்கல்லாறு, ஊட்டி (50 மி.மீ.), திருவாரூர், பூதபாண்டி, திருவள்ளூர், தஞ்சாவூர் (40 மி.மீ.), கேட்டி, பெரியகுளம், கரூர், திருப்பூர், குளச்சல், கொல்லிமலை, ராமநாதபுரம், தேவலா (30 மி.மீ.), வால்பாறை, தொண்டி, கோத்தகிரி, தரங்கம்பாடி, உடுமலைபேட்டை, கன்னியாகுமரி, சிதம்பரம்,

பரங்கிப்பேட்டை, பள்ளிப்பட்டு, கொடைக்கானல், பொள்ளாச்சி, திருத்துறைப்பூண்டி, மணிமுத்தாறு, தளி, கும்பகோணம், ஆத்தூர், விருதுநகர் (20 மி.மீ.), பெருந்துறை, ஆம்பூர், ராமேஸ்வரம், உசிலம்பட்டி, தென்காசி, நத்தம், பாபநாசம், கல்லணை, சிவகிரி, பூந்தமல்லி, சீர்காழி, பரமக்குடி, தாராபுரம், புழல், சிவகாசி, செங்கோட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர், புதுச்சேரி (10 மி.மீ.) உள்ளிட்ட இடங்களிலும் மழை பெய்துள்ளது.

**சில இடங்களில் இன்று பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுவையின் சில இடங்களில் திங்கள்கிழமை பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள தகவல்: லட்சத் தீவுகள், கேரள கடற்கரையை ஒட்டி உருவாகியிருந்த வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சி, அதே இடத்தில் நீடிக்கிறது. இந்தச் சுழற்சி காரணமாக தமிழகத்தின் உள்மாவட்டங்களின் சில இடங்களில் பலத்த மழை பெய்யும். பிற இடங்களிலும் மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் பதிவான மழை விவரம் (மி.மீ.): நாகர்கோவில்- 110, பொன்னேரி- 90, கீரனூர், வேதாரண்யம்- 80, திருச்சி, மயிலாடுதுறை- 70, பேச்சிப்பாறை, குழித்துறை- 60, கிருஷ்ணகிரி, சின்னக் கல்லாறு, உதகை- 50, திருவாரூர், பூதப்பாண்டி, திருவள்ளூர், தஞ்சாவூர்- 40, கேட்டி, பெரியகுளம், கரூர், திருப்பூர், குளச்சல், கொல்லிமலை, ராமநாதபுரம், தேவலா 30, வால்பாறை, தொண்டி, கோத்தகிரி, தரங்கம்பாடி, உடுமலைப்பேட்டை, கன்னியாகுமரி, சிதம்பரம், பரங்கிப்பேட்டை, பள்ளிப்பட்டு, கொடைக்கானல், பொள்ளாச்சி, திருத்துறைப்பூண்டி, மணிமுத்தாறு, தளி, கும்பகோணம், ஆத்தூர், விருதுநகர்- 20, பெருந்துறை, ஆம்பூர், ராமேஸ்வரம், உசிலம்பட்டி, தென்காசி, நத்தம், பாபநாசம், கல்லணை, சிவகிரி, பூந்தமல்லி, சீர்காழி, பரமக்குடி, தாராபுரம், புழல், சிவகாசி, செங்கோட்டை, ஸ்ரீவில்லிப்புத்தூர், புதுச்சேரி- 10 இடங்களிலும் மழை

**தென்னை மரங்களுக்கு பயிர்க் காப்பீடு: வேளாண் துறை ஆலோசனை**

தென்னை மரங்களுக்கு பயிர்க் காப்பீடு செய்து பயன்பெறுமாறு, விவசாயிகளுக்கு வேளாண் துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

இது குறித்து, வேளாண் இணை இயக்குநர் கு.ரா. சாரநாத்பாபு வெளியிட்டுள்ள அறிக்கை: மதுரை மாவட்டத்தில் 10,674 ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. தென்னை மரத்துக்கு பயிர்க் காப்பீடு செய்வதன் மூலம், வெள்ளம், புயல், வறட்சி, பூச்சி நோய் தாக்குதல் உள்ளிட்ட இயற்கைச் சீற்றங்களில் பாதிக்கப்படும் நிலையில் இழப்பீடு பெற்றுக் கொள்ளலாம்.

காப்பீடு செய்யப்பட்ட தென்னை மரம் முழுமையாகப் பாதிக்கப்பட்டாலோ, முழுமையாகப் பலன் கொடுக்காத நிலை ஏற்பட்டாலோ விதிமுறைகளுக்கு உள்பட்டு இழப்பீடு பெறலாம். 4 முதல் 15 வயது வரை உள்ள மரமாக இருந்தால், அரசு மானியம் நீங்கலாக 2.25 ரூபாயும், 15 வயதுக்கு மேற்பட்ட மரமாக இருந்தால் 3.50 ரூபாயும் பிரீமிய தொகையாகச் செலுத்த வேண்டும்.

இது தொடர்பான விவரங்களுக்கு, வட்டார வேளாண் விரிவாக்க மையங்களைத் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

**விவசாயி குடும்பத்துக்கு நிவாரணம்**

தேனி அருகே உப்புக்கோட்டையில் வாழைச் சாகுபடியில் நஷ்டம் ஏற்பட்டதால் விவசாயி அழகுவேல், தற்கொலை செய்து கொண்டார். அழகுவேலின் குடும்பத்துக்கு நிவராண நிதியாக ரூ.20 ஆயிரத்தை மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில் தலைவர் எம்.பாண்டியன், செயலர் கே.பிரபாகரன், வாழை விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆர்.நாராயணசாமி மற்றும் நிர்வாகிகள் வழங்கினர்.

மாவட்டத்தில் வாழைச் சாகுபடியில் நஷ்டம் அடைந்துள்ள விவசாயிகளுக்கு, வாழை மரம் ஒன்றுக்கு ரூ.100 வீதம் அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று மாவட்ட விவசாயிகள் சங்கத் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

**வருசநாடு பகுதியில் இலவம் பஞ்சு விலை உயர்வு**

வருசநாடு பகுதியில் இலவம் பஞ்சின் விலை உச்சத்தை எட்டியதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தேனி மாவட்டத்தில் இலவம் விவசாயம் நடைபெற்று வருகிறது. இவை குறைந்த அளவு தண்ணீரில் வறண்ட பகுதியிலும் செழித்து வளருவதால் கடமலைக்குண்டு, வருசநாடு, மயிலாடும்பாறை, முருக்கோடை உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் இலவம் மரங்கள் நடப்பட்டுள்ளன.

இலவம் மரங்களில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் பூ பூத்து அதன் பின் பிஞ்சுகள் வளர்ந்து மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை இலவம் பஞ்சு பறிப்புக்கு தயாராகி விடும். மரங்களில் இருந்து பறிக்கப்படும் இலவம் காய்களை காயவைத்து இலவம் பஞ்சு தனியாக பிரித்து எடுக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இலவம் மரங்களுக்கு பூச்சி மருந்து அடிப்பது உள்ளிட்ட எந்தவிதமான பராமரிப்பு செலவுகளும் கிடையாது. கடந்த ஆண்டு இலவம் பஞ்சு கிலோ ரூ.30 முதல் 36 வரை விற்பனையானது. ஆனால் இந்த ஆண்டு பூக்கும் பருவத்தில் தொடர் மழை பெய்ததால் பூக்கள் உதிர்ந்து காய்ப்பும் குறைந்து 75 சதவீதம் மகசூல் பாதிக்கப்பட்டது. இதனால் இலவம் பஞ்சு வரத்து குறைந்து விலை அதிகரித்துள்ளது. இந்த ஆண்டு எப்போதும் இல்லாத வகையில் இலவம் பஞ்சு கிலோ ரூ.105முதல் ரூ.110 வரை விற்பனையாகிறது.

இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இதுகுறித்து வருசநாட்டை சேர்ந்த விவசாயி ராமர் கூறியது: வருசநாடு பகுதியில் கிடைக்கும் இலவம் பஞ்சை வியாபாரிகள் வாங்கி கொல்கத்தா, மும்பை போன்ற வெளி மாநிலங்களுக்கு அதிக விலைக்கு விற்கின்றனர். இதனால் விவசாயிகளை விட வியாபாரிகள் தான் லாபம் பார்க்கின்றனர்.

எனவே வருசநாடு பகுதியில் இலவம் பஞ்சு கொள்முதல் மையங்களை நிறுவி விவசாயிகளின் நலன்காக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**ஆழியாறு அணையில் பாசனத்துக்குத் தண்ணீர் திறப்பு**

ஆழியாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.ஆழியாறு அணை மூலமாக புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பாசனப் பகுதிகளில் மொத்தம் 50 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.தில், பழைய ஆயக்கட்டு பகுதியில் உள்ள பள்ளிவிளங்கால், பெரியணை, காரப்பட்டி, அரியாபுரம், வடக்கலூர் அம்மன் ஆகிய ஐந்து கால்வாய்கள் மூலம் 6,400 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன.தற்போது, முதல் போக நெல் சாகுபடி துவங்க உள்ளதால் பாசனத்துக்கு தண்ணீர் திறக்கக் கோரி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தனர். அவர்களது கோரிக்கையை ஏற்று, ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இதன்படி, பொள்ளாச்சி சார்-ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே மதகை திறந்து வைத்தார். இதில், பவர் ஹவுஸ் வழியாக விநாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றபட்டது. தொடர்ந்து இரண்டு போக பாசனத்துக்கு அடுத்தாண்டு ஏப்ரல் 15-ஆம் தேதி வரை மொத்தம் 10 மாதங்கள் 15 நாள்களுக்கு 3,714 மில்லியன் கன அடி தண்ணீர் வழங்கப்படவுள்ளது. இதில் குடிநீர் தேவைக்கும் பயன்படுத்தப்படும்.இந்நிகழ்ச்சியில், கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சுப்ரமணியம், உதவி செயற்பொறியாளர் கருணாகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

**கோவை மாவட்டத்தில் ஒரே நாளில் 460 மி.மீட்டர் மழைப் பதிவு**

கோவை மாவட்டத்தில் கடந்த 5 நாள்களாக மழை பெய்து வரும் நிலையில், வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் சனிக்கிழமை காலை 8 மணி வரையிலான 24 மணி நேரத்தில் 460 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதில் அதிகபட்சமாக சூலூரில் 92.20 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

மழை அளவு விவரம் (மி.மீ.): அன்னூர் 41, பீளமேடு 89.30, மேட்டுப்பாளையம் 71.10, பெரியநாயக்கன்பாளையம் 55, சூலூர் 92.20, தமிழ்நாடு வேளாண்மைப்பல்கலைக் கழகம் 38.80, சின்னகல்லார் 1,

பரம்பிக்குளம் 2, வால்பாறை வட்டாட்சியர் அலுவலகம் 1, கோவை தெற்கு 75 மி.மீ. அளவில் மழை பதிவாகியுள்ளது. இதனிடையே, வெள்ளிக்கிழமை இரவு பெய்த மழையினால் ராமநாதபுரம் பகுதியில் தாழ்வான பகுதிகளில் உள்ள வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது.

மரங்கள் விழுந்தன: கோவை மாநகரில் மழைக் காரணமாக வெள்ளிக்கிழமை இரவு காந்திபுரம் பகுதியில் சாலையோர மரம் முறிந்து விழுந்தது. சனிக்கிழமை அரசு கலைக் கல்லூரி சாலையிலும் மரம் முறிந்து விழுந்தது. தீயணைப்புப் படையினர் இந்த மரங்களை அப்புறப்படுத்தினர்.பாலத்தில் சிக்கிய பேருந்து: கனமழை காரணமாக கோவை ரயில் நிலையம் அருகே லங்கா கார்னர் பாலத்தில் சனிக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் 45 பயணிகளுடன் சென்று கொண்டிருந்த தனியார் பேருந்தின் இன்ஜினில் மழை நீர்

புகுந்ததால் பாலத்தின் கீழ் பேருந்து சிக்கிக் கொண்டது. கோவை தெற்கு தீயணைப்புப் படையினர் விரைந்து சென்று பயணிகளை கயிறு மூலமாக ஒரு மணி நேரம் போராடி, பத்திரமாக மீட்டனர். இங்கு, தேங்கிய மழை நீரை மோட்டார் மூலமாக உறிஞ்சி அப்புறப்படுத்தும் பணியில் மாநகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டனர். அவிநாசி சாலை மேம்பாலத்தின் கீழ் மழை நீர் பெருக்கெடுத்தோடியது. இதனால், அவ்வழியாக வாகனப் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. இதையடுத்து, அப்பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சிறுவாணி அணை நீர் மட்டம் உயர்வு: கோவை மாவட்டத்தின் முக்கிய நீர் ஆதாரமான சிறுவாணி அணையின் நீர் மட்டம் கடந்த மூன்று நாள்களில் 15 செ.மீ. உயர்ந்து, 868.50 மீட்டராக (கடல் மட்டத்திலிருந்து) உள்ளது.

கோவை குற்றாலம்: மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள கோவை குற்றாலம் நீர்வீழ்ச்சியில் சுற்றுலாப் பயணிகளின் வருகை சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகளவில் காணப்படுவது வழக்கம். ஆனால், கடந்த சில நாள்களாகப் பெய்து வரும் தொடர் மழைக் காரணமாக சனிக்கிழமை சுற்றுலாப் பயணிகள் வருகை குறைந்த அளவிலேயே இருந்தது.

**உதகையில் மலர்க் கண்காட்சி நிறைவடைந்தது**

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 119-ஆவது மலர்க் கண்காட்சி நிறைவடைந்ததைத் தொடர்ந்து, பரிசளிப்பு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.விழாவுக்கு, ஆட்சியர் பொ.சங்கர் தலைமை வகித்தார். மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குநர் மணி வரவேற்றார்.

மலர்க் கண்காட்சியையொட்டி, நடத்தப்பட்ட சிறந்த மலர்த் தோட்டங்கள், காட்சி அரங்குகளுக்கு ஆட்சியர் பரிசுகள் வழங்கினார்.

சிறந்த தோட்டத்துக்கான கவர்னர் சுழற்கோப்பை, வெலிங்டன் ராணுவப் பயிற்சி கல்லூரிக்கு வழங்கப்பட்டது. மலர்க் காட்சிக்கான முதல்வர் சுழற்கோப்பை, உதகை ஸ்டெர்லிங் பயோடெக் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது.பெரிய தோட்டங்களின் வரிசையில், பல்வேறு தனியார் தோட்டங்களுக்கு 52 சுழற்கோப்பைகள் வழங்கப்பட்டன. தனியார் தோட்டங்களுக்கு இடையே நடைபெற்ற போட்டியில் 182 பேர் பங்கேற்றனர். இதில், 88 பேருக்கு முதல் பரிசு, 82 பேருக்கு 2-ஆம் பரிசு, 8 பேருக்கு 3-ஆம் பரிசு வழங்கப்பட்டது.காட்சி அரங்குப் போட்டியில், 237 பேர் பங்கேற்றனர். இதில், 179 பேருக்கு முதல் பரிசு, 154 பேருக்கு 2-ஆம் பரிசு, 27 பேருக்கு 3-ஆம் பரிசுகள் வழங்கப்பட்டன. கண்காட்சியில் இடம் பெற்றிருந்த 26 காட்சி அரங்குகளுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் கே.ஆர்.அர்ஜுணன், தாட்கோ வாரியத் தலைவர் எஸ்.கலைச்செல்வன், மக்களவை உறுப்பினர் சி.கோபாலகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சித் தலைவர் அ.மேனகா, உதகை சட்டப்பேரவை உறுப்பினர் புத்திசந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் உமாராணி நன்றி கூறினார்.

**மலைத்தோட்ட காய்கறிகளுக்கு மானியத்தை உயர்த்தி வழங்க வலியுறுத்தல்**

மலைத்தோட்ட காய்கறி மற்றும் பயிர்களுக்கு மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என விவசாய சங்கங்கள் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலான மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக, மலைத்தோட்ட காய்கறி விவசாயிகள் காய்கறி மற்றும் பயிர்களை நடவு செய்யும்

பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர். குறிப்பாக கரும்பாலம், கிளிஞ்சடா, சேலாஸ், தூதூர்மட்டம், கொலக்கம்பை, உபதலை, வண்டிச்சோலை, வசம்பள்ளம், கேத்தி, உள்ளிட்ட பகுதிகளில் கேரட், உருளைக்கிழங்கு, முட்டைகோஸ் போன்ற பயிர்களைப் பயிரிட்டுள்ளனர். கடந்த காலங்களில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், 50 சதவீதம் மானியத்தில் உபகரணப் பொருள்களும், விதைகளும் வழங்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மானிய விலையில் உரங்களும் வழங்கப்பட்டன. ஆனால், தற்போது அரசு மானியம் 25 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. உரங்களும் முறையாக வழங்கப்படாததால் வெளிச்சந்தையில் கூடுதல் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, மாவட்ட நிர்வாகம் மீண்டும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய உதவி வழங்குவதுடன், தடையின்றி உரம் வழங்கி விவசாயத்தை ஊக்கப்படுத்த வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

**கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்**

செய்யாறை அடுத்த அளத்துறை கிராமத்தில் கால்நடைப் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ஹேண்ட் இன் ஹேண்ட் தொண்டு நிறுவனமும், தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையும் இணைந்து நடத்திய இம்முகாமுக்கு அளத்துறை ஊராட்சித் தலைவர் ஆனந்தி சீனுவாசன் தலைமை வகித்து தொடங்கி வைத்தார்.

முகாமில் வீரம்பாக்கம் கால்நடை மருந்தக உதவி மருத்துவர் பி. மணிமாறன், ஆய்வாளர் பி.பாபு, உதவியாளர் ஆர்.மூர்த்தி ஆகியோர் அடங்கிய குழுவினர் பங்கேற்று சுமார் 55 மாடுகளைப் பரிசோதனை செய்து சிகிச்சை அளித்தனர். மேலும் சினை மருந்து, சத்து மாத்திரை, வயிற்றுப்போக்கு ஆகியவற்றுக்கும் சிகிச்சை அளித்தனர். முகாம் ஏற்பாடுகளை ஹேண்ட் இன் ஹேண்ட் தொண்டு நிறுவனத்தின் தொழில் முனைவோர் அலுவலர் டி.வீரமணிகண்டன், களப்பணியாளர் பலராமன், கால்நடை துறையினர் செய்திருந்தனர்.

**மே 20-இல் விவசாயிகள் மாநாடு**

செய்யாறு வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்று வரும் ஜமாபந்தியின் நிறைவு விழாவும், விவசாயிகள் மாநாடும் வரும் புதன்கிழமை(மே 20) நடைபெறுகிறது.நிறைவு விழாவில் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன், ஆரணி தொகுதி எம்.பி செஞ்சி சேவல் வெ.ஏழுமலை, வந்தவாசி தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் வே.குணசீலன் ஆகியோர் கலந்து கொண்டு நலத் திட்ட உதவிகளை வழங்குகின்றனர்.

திருவத்திபுரம் நகர்மன்றத் தலைவர் பாவை ரவிச்சந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர்கள் விமலா மகேந்திரன், கோமதி ரகு, நிர்மலா மூர்த்தி ஆகியோர் பங்கேற்கின்றனர்.

விழா ஏற்பாடுகளை செய்யாறு வட்டாட்சியர் ஜி.எஸ்.கோபால்ஷாமி, சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் வெ.பரிதிமால், வருவாய்த் துறையினர் செய்து வருகின்றனர்.

**விதைப்பண்ணை மூலம் உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கு ஊக்கத் தொகை**

விதைப்பண்ணை அமைத்து உற்பத்தி செய்யப்படும் விதைகளுக்கு அரசால் ஊக்கத் தொகை அளித்து கொள்முதல் செய்யப்படுவதால் தரமான விதைகளை விவசாயிகள் உற்பத்தி செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தருமபுரி விதைச்சான்று உதவி இயக்குநர் எம்.ஆர்.அசோகன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்து வருவதால் நீர் ஆதாரமுள்ள இடங்களில் பாசிப்பயறு, எள், நிலக்கடலை ஆகிய பயிர்களில் விதைப்பண்ணை அமைக்க ஏற்ற தருணமாகும்.

அரசு பரிந்துரைப்படி ஏக்கருக்குத் தேவையான விதையைப் பெற்று விதைப்பு செய்து, 35 நாள்களுக்குள் அல்லது பூப்பதற்கு 15 நாள்களுக்கு முன் இதில் எது முன்னதோ அதற்குள் உரிய விதைப்பு அறிக்கைப் படிவத்தில் விவரங்கப்ளைப் பூர்த்தி செய்து நிர்ணயிக்கப்பட்ட

தொகையுடன், விதை வாங்கிய பில் இணைத்து 3 நகள்களில் பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு ரகத்திற்கும் தனித்தனி விதைப்பறிக்கை தயார் செய்து பதிய வேண்டும்.

விதைப்பண்ணை அமைக்கும் பணியில் வட்டார அளவிலான விதை அலுவலர் விவசாயிகளுக்கு உதவிக்கரமாக இருப்பார். விதையின் தரத்தை உறுதி செய்ய விதைச்சான்று அலுவலரால் சுட்டிக் காட்டப்படும் பிற ரக கலப்புச் செடிகள், நோய் தாக்கப்பட்ட செடிகள், அகற்றப்பட வேண்டிய களைகள் ஆகியவற்றை உரிய பருவத்தில் அகற்ற வேண்டும்.

மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்ட தரங்களின்படி விதைப்பயிர் தேர்ச்சி பெறும்பட்சத்தில் உரிய ஈரப்பதத்தில் அறுவடை செய்து நன்கு தூற்றி காயவைத்து சுத்தமான கலத்தில் விதையைப் பிரித்தெடுத்து விதைச்சான்று அலுவலரின் ஈய முத்திரையுடன் விதைச்சான்று நடைமுறைப்படி சீட்டு சுத்திகரிப்பு அறிக்கையுடன் வேளாண்மை விரிவாக்க மையத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நெல், சிறுதானியம், நிலக்கடலை விதைகளுக்கு கிலோவிற்கு ரூ.3, பயறு வகைப் பயிர்களுக்கு சான்று விதைகளுக்கு கிலோ ரூ.10 ஊக்கத் தொகை உள்ளூர் அங்காடி விலையுடன் கூடுதலாக அளித்து கொள்முதல் செய்யப்படும்.

எனவே, விவசாயிகள் சாகுபடி செய்யவிருக்கும் பயிரில் விதைப்பண்ணை அமைத்து கூடுதல் வருமானம் ஈட்ட வேண்டும்.

**திருச்செங்கோட்டில் ரூ.1.40 கோடிக்கு மஞ்சள் ஏலம்**

திருச்செங்கோடு, மே 16: திருச்செங்கோடு கூட்டுறவு வேளாண் விற்பனைச் சங்கத்துக்கு வந்த 2,500 குவிண்டால் மஞ்சள் ரூ.1.40 கோடிக்கு சனிக்கிழமை ஏலம் போனது.

ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 2,500 குவிண்டால் மஞ்சளை விற்பனைக்குக் கொண்டு வந்தனர்.

மஞ்சளைக் கொள்முதல் செய்ய, ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் பகுதிகளிலிருந்து 30-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்தனர். 2,500 குவிண்டால் மஞ்சள் ரூ.1.40 கோடிக்கு ஏலம் போனது.

இதில், விரலி குவிண்டாலுக்கு ரூ.6,338 முதல் ரூ.9,399 வரையும், கிழங்கு ரூ.6,488 முதல் ரூ.7,819 வரையும், பனங்காளி ரூ.7,777 முதல் ரூ.18,699 வரையும் ஏலம் போயின.

பிற சந்தைகளை விட, குவிண்டாலுக்கு ரூ.400 அதிகமாக விலை கிடைத்ததாகவும், விவசாயிகளுக்கு சனிக்கிழமையே பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாகவும் சங்க அலுவலர்கள் தெரிவித்தனர்.

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 2,248 கன அடியாக அதிகரித்தது.

கடந்த சில வாரங்களாக மேட்டூர் அணைக்கு நொடிக்கு 500 கன அடிக்கும் குறைவாக தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணைக்கு நீர்வரத்து குறைந்த நிலையில், குடிநீர்த் தேவைக்காக அணையில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் குறைந்தது.

இந்த நிலையில், கடந்த சில நாள்களாக காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வந்தது. இதையடுத்து, ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 2,248 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால் அணை நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67.41 அடியாக இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப் படுகிறது. அணையின் நீர் இருப்பு 30.51டி.எம்.சி.யாக உள்ளது.

## வேளாண் இயந்திர வாடகை நிலையங்கள் அமைக்க மான்யம்

கரும்பு விவசாயத்துக்கான வேளாண் இயந்திரங்கள் வாடகை நிலையங்கள் அமைக்க விரும்பும் தொழில் முனைவோருக்கு மான்யம் வழங்கப்படுகிறது.இதுகுறித்து, ஆட்சியர் எ.சரவணவேல்ராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்நாட்டில் கரும்பு சாகுபடியை இயந்திரமயமாக்கும் நோக்கில் வேளாண் இயந்திரங்களைப் பயன்படுத்தும் வகையில், மாநில அளவில் 18 வாடகை நிலையங்கள் அமைத்திட அரசு முடிவு செய்துள்ளது.இத்திட்டத்தின் மூலம் 11 வகையான இயந்திரங்களை 60 சதவீத விவசாயிகளின் பங்களிப்பு மற்றும் 40 சதவீத அரசு மானியத்துடன் வேளாண்மைப் பொறியியல் துறையால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து இயந்திரங்களை விலைக்கு வாங்க விருப்பம் உள்ள, அனுபவமுடைய, தகுதி வாய்ந்த தொழில் முனைவோர் விண்ணப்பிக்கலாம்.60-70 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர், டிராக்டருடன் இணைத்து பயன்படுத்தக் கூடிய கல்டிவேட்டர், ரோட்டவேட்டர், கரும்பு கணு எடுக்கும் உபகரணம், மினி டிராக்டர், களை எடுப்பான் இன்பீல்டர்கள், கரும்பு தோகையை தூளாக்க உதவும் சிரேடர் இயந்திரம், கரும்பு அடிக்கட்டை சீவிடும் இயந்திரம், அறுவடை இயந்திரம் ஆகிய 11 வகையான வேளாண் கருவிகள் மொத்த விலைரூ. 189. 75 லட்சமாகும். இதில்,அரசு மானியம் 40 சதவீதம் போக மீதித் தொகை ரூ.131.12 லட்சம் தொழில் முனைவோரின் பங்களிப்பாக இருக்க வேண்டும். விருப்பமுள்ள தொழில் முனைவோர் பயன்பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோடை மழையைப் பயன்படுத்தி மானாவாரியில் அதிக சாகுபடி பெற யோசனை

கோடை மழையை பயன்படுத்தி மானாவாரி சாகுபடியில் அதிக மகசூல் பெற விவசாயிகளுக்கு ஆலோசனை கூறப்பட்டுள்ளது.இது தொடர்பாக சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ராஜாஜோஸ்லின் வெளியிட்ட செய்திக்குறிப்பு:மாவட்டத்தில் ஆண்டிமடம், செந்துறை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் மானாவாரி பயிர் சாகுபடியாகிறது. மானாவாரி சாகுபடியின்போது சில வழிமுறைகளை பின்பற்றினால் நல்ல மகசூல் பெறலாம்.

மானாவாரி வேளாண்மையில் அதிக மகசூல் பெற கோடை காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பது மிக அவசியம்.மேலும் மழையால் ஏற்படும் மண் அரிப்பைத் தடுக்க கோடைமழையைக் கொண்டுட உழவு செய்வதால் மண்ணின் நீர்ப் பிடிப்புத் தன்மை அதிகரிக்கிறது.கோடை உழவின் மூலம் களை, பூஞ்சாணங்கள் ஆகியவற்றில் இருந்து பயிரை ஒரளவு காப்பாற்ற முடியும். மேலும் உழவு செய்யும்போது சரிவிற்கு குறுக்கே உழவு செய்வதால் மழை நீர் ஆங்காங்கே தேங்கி நின்று மண்ணின் அடிப்பகுதியை சென்றடைய ஏதுவாகிறது.

மேலும் மண்ணில் உள்ள ஈரம் ஆவியாவதை தடுக்க பாலீத்தீன் விரிப்பு கட்டைகள், காய்ந்த இலை சருகுகள் போன்றவற்றால் நிலப்பரப்பை மூடி,மண் ஈரத்தை பாதுகாக்கலாம்.தென்னை நார்க்கழிவு போன்ற எளிதாகக் கிடைக்கக் கூடிய பொருட்களை நிலப் போர்வையாக பயன்படுத்தலாம்.தென்னை நார்க்கழிவு தனது எடையைப்போல 5 மடங்கு நீரை ஈர்த்து வைத்துக் கொள்ளும். பயிர் வளர்ச்சிக்கு தேவையான நேரத்தில் ஈரப்பதத்தை அளிப்பதால் இது மிகச்சிறந்த நிலப் போர்வை. இதனால் அங்கக உரங்கள் மண்ணில் சேர்வதுடன், களைகளும் வெகுவாக கட்டுப்படுத்தப்படுகிறது.

மேலும் இச்சாகுபடியில் மண் வளத்தை பராமரிப்பதற்கு பயிர்களின் உற்பத்தி திறனை அதிகப்படுத்துவதற்கும், ஒருங்கிணைந்த உர நிர்வாக முறைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு ஹெக்டேருக்கு 12.5 டன் தொழு உரம் அல்லது 750 கிலோ ஊட்டமேற்றிய தொழு உரம் மற்றும் நுண்ணுயிர் உரங்களான அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா பயிர்களுக்கு உழவு செய்யும்போது இட வேண்டும். பொட்டாசியம் நைட்ரேட் 1 சத கரைசலை பயிரின் வளர்ச்சி பருவத்தில் தெளிப்பதால் செடிகளுக்கு குறைந்த செலவில் ஊட்டச்சத்து கிடைப்பதுடன், வறட்சியை தாங்கும் தன்மையும் கிடைக்கிறது.

இவ்வாறு செய்வதன் மூலம் மானாவாரி பயிர்களில் அதிக மகசூல் பெற முடியும்.

மானாவாரி பயிர்களான செடிமுருங்கை, பெருநெல்லி, புளி, சீத்தா,இலந்தை, விளா, நாவல், கொடுக்காப்புளி, ஆகிய பழ வகைகளை நீர் குறைந்த நிலங்களில் மானாவாரி பயிர் செய்வதால் நல்ல வருமானம் கிடைக்கும்.

பொதுவாக மானாவாரி நிலங்களில் இருந்து கிடைக்கும் வருமானம் அப்பகுதியில் பெய்யும் மொத்த மழை அளவைப் பொறுத்தது அல்ல. சாகுபடி செய்யும் மாதங்களில் (செப்டம்பர்,டிசம்பர்) மழை கிடைக்கிறதா இல்லையா என்பதை பொறுத்தே உழவர்களின் லாபம் அல்லது இழப்பு அமைகிறது, பருவ மழை ஒரு மாதம் முந்தினாலும், பிந்தினாலும் விளைச்சலை முழுமையாக இழக்கும் அபாயம் உள்ளது.

**அறந்தாங்கியில் தென்னை பதநீர் விற்பனை**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் தென்னை பதநீர் விற்பனை ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கப்பட்டது.

அறந்தாங்கி தென்னை வளர்போர் சங்கம் மூலம் தொடங்கப்பட்ட தென்னை பதநீர் விற்பனையை பட்டுக்கோட்டை தென்னை பதநீர் இறக்கும் சங்கத் தலைவர் மைக்கேல்ராஜ் தொடக்கி வைத்தார்.

இதுகுறித்து புதுக்கோட்டை மாவட்ட தென்னை வளர்ப்போர் சங்கத் தலைவர் ஆ. செல்லத்துரை கூறுகையில், தென்னை வளர்ப்போர் சங்கத்தின் இடைவிடாத முயற்சியின் விளைவாக தமிழ்நாடு அரசு கதர் வாரியம் மாவட்ட தென்னை வளர்ப்போர் சங்க உறுப்பினர்களுக்கு தென்னை மரத்திலிருந்து பதநீர் இறக்கி விற்பனை செய்ய அனுமதி வழங்கியுள்ளது. இந்த பதநீரில் உடலுக்கு தேவையான வைட்டமின்கள், தாது உப்புக்கள், இரும்புச் சத்துக்கள் உள்ளன.

தினமும் 100 லிட்டர் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

இதில் அறந்தாங்கி வர்த்தக சங்க துணைத் தலைவர் சி. கலாநேசன், மாவட்ட தென்னை வளர்ப்போர் சங்கச் செயலர் டி.ஏ.என். பீர்சேக், புதுக்கோட்டை ரோட்டரி கிளப் முன்னாள் தலைவர் ஏ.பி.ஆர். சகாதேவன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கூடுதல் இயக்குநருக்கு வேளாண் துறையினர் வாழ்த்து**

வேளாண் துறை கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு பெற்ற புதுகை வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகானுக்கு வேளாண்மைத் துறை மாவட்ட நீர் வடிப்பகுதி மேம்பாட்டு முகமை அலுவலர்கள் சார்பில் பாராட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

புதுக்கோட்டையில் நடைபெற்ற விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் சு. மாரிமுத்து சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று வேளாண் கூடுதல் இயக்குநராக (மத்திய அரசுத் திட்டம்) பதவி உயர்வு பெற்றுள்ள கே.எம். ஷாஜகானுக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார். இதில் வருவாய்த் துறை அலுவலர் சங்க மாநில துணைத் தலைவர் எஸ். நாகராஜன், வட்டாட்சியர்கள் வி.எம். திருமலை, க. தமிழ்மணி, அ. கமலக்கண்ணன், முன்னோடி வங்கி மேலாளர் (ஓய்வு) எம். முத்து, விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஜி.எஸ். தனபதி, செல்லத்துறை உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**800 ஏக்கரில் உளுந்து பயிர் சேதம்**

திருநெல்வேலி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், சுமார் 800 ஏக்கரில் உளுந்து பயிர் சேதமடைந்திருப்பதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரவருணி பாசனத்தில் பிசான சாகுபடி அறுவடை முடிவடைந்ததும், ஊடுபயிராக உளுந்து பயிர் செய்வது வழக்கம். நிகழாண்டில் மார்ச் மாத இறுதியில் பிசான பருவம் அறுவடை முடிவடைந்த நிலையில், மேலப்பாளையம், முன்னீர்பள்ளம், பாளையங்கோட்டை, பாலாமடை, ராமையன்பட்டி, பாறைகுளம், சுத்தமல்லி, சங்கரன்திரடு, முக்கூடல், பாப்பாக்குடி, கடையம், கீழஆம்பூர், அம்பாசமுத்திரம் ஆகிய பகுதிகளில் உளுந்து பயிர் செய்யப்பட்டது. மாவட்டத்தில் 5,540 ஹெக்டேரில் உளுந்து பயிர் செய்யப்பட்டுள்ளதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கோடைக் காலத்தில் குறைந்த அளவு தண்ணீர் போதுமானது என்பதால், மார்ச் மாத

இறுதியில் பயிரிட்டு ஜூன் முதல் வாரத்தில் அறுவடை செய்யும் வகையில் விவசாயிகள் உளுந்து பயிரிட்டு வருகின்றனர்.

தற்போது தொடர்ந்து பெய்து வரும் மழையால், உளுந்து பயிர் பெருமளவில் சேதமடைந்துள்ளது. ஆழ்வார்குறிச்சி, கீழஆம்பூர், சிவசைலம் வட்டாரத்தில் 600 க்கும் மேற்பட்ட ஏக்கரில் உளுந்து பயிர் சேதமடைந்துள்ளதாக விவசாயிகள் சங்கச் செயலர் ஆர். கசமுத்து தெரிவித்தார். இதேபோல் பாளையங்கோட்டை, மேலப்பாளையம், அம்பாசமுத்திரம் பகுதிகளிலும் அதிகளவில் உளுந்து பயிர் சேதமடைந்துள்ளது. இம்மாவட்டத்தில் சுமார் 800 ஏக்கரில் உளுந்து பயிர் சேதமடைந்திருப்பதாக விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

விலை சரிவு: மேலப்பாளையம், பாளையங்கோட்டை பகுதிகளில் மழைநீரில் மூழ்கி சேதமடைந்த உளுந்து பயிரை அறுவடை செய்து உலர வைக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். உளுந்து கிலோ ரூ. 120 க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில், மழையால் விலை சரிந்து தற்போது கிலோ ரூ. 72 க்கு கொள்முதல் செய்து வருவதாக தெரிவித்தனர்.

**கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க வேண்டும்**

மாவட்டத்தில் புதியதாக கால்நடை கிளை நிலையங்கள் அமைக்க வேண்டுமென தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் மாவட்ட பொதுக்குழுக் கூட்டம் கடலூரில் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டச் செயலர் ஆர்.ஏழுமலை தலைமை வகித்தார். இணைச்செயலர் பாபு முன்னிலை வகித்தார். மாநில பொருளர் காமராஜ், இணைச்செயலர் பாரத்கருணாநிதி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றுப் பேசினர். ஓய்வுபெற்ற ஆய்வாளர்கள் சுப்பிரமணியம், தி.ராஜமச்சேந்திரசோழன், ராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

கூட்டத்தில், கடலூர் மாவட்டத்தில் புதியதாக கால்நடை கிளை நிலையங்களை அமைக்க வேண்டும். கால்நடை ஆய்வாளர் பயிற்சியை

தொடங்க வேண்டும். கிளை நிலையங்களுக்கு சொந்த கட்டடம் கட்ட வேண்டும். கால்நடை ஆய்வாளர்களுக்கு தகுதிகாண் பருவம் உரிய காலத்தில் வழங்க வேண்டும். அனைத்து ஆய்வாளர்களுக்கும் ஆபத்து ஈட்டுப்படி வழங்க வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக கோட்டச் செயலர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி வரவேற்க, பா.வீரக்குமார் நன்றி கூறினார்.

**மாவட்டத்தில் பரவலான மழை**

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஞாயிற்றுக்கிழமை இரவு கனமழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து இதமான குளிர்காற்று வீசியது.

விழுப்புரம், திண்டிவனம், திருக்கோவிலூர், உளுந்தூர்பேட்டை, கள்ளக்குறிச்சி, தியாகதுருகம், வானூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பெய்த மழையால், ஏரி, குளங்களுக்கு நீர் வரத்து தொடங்கி உள்ளது.

தற்போது பெரும்பாலான விவசாயிகள் நெல், கரும்பு, மணிலா உள்ளிட்ட உணவுப் பயிர்களையும், சவுக்கு உள்ளிட்ட மரங்களையும் சாகுபடி செய்துள்ளனர். இவை தண்ணீரின்றி இருந்த நிலையில் பெய்த இந்த மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

வறண்டு கிடந்த கிணறுகளில், மழை நீர் ஊற்றெடுத்துள்ளது. மேலும், கொளுத்தி வந்த கோடையின் வெப்பம், மழையால் தணிந்து இதமான குளிர்காற்று வீசியது.

**கோமுகி அணையில் தண்ணீர் வெளியேற்றம்**

பழுதான மதகை சீரமைப்பதற்காக, கோமுகி அணையிலிருந்து 200 கன அடி தண்ணீர் சனிக்கிழமை முதல் வெளியேற்றப்பட்டு வருகிறது. நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வரும் நிலையில் தண்ணீர் வெளியேற்றப்படுவது வேதனையளிப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

கல்வராயன்மலை அடிவாரத்தில் அமைந்துள்ள கோமுகி அணைக்கு, கல்வராயன்மலைப் பகுதியில் ஓடும் சிற்றாறுகளின் வழியாக நீர் வரத்து உள்ளது. 46 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையில், அதன் பாதுகாப்பை கருதி 44 அடி நீர் தேக்கப்படுகிறது.

இந்த அணையின் புதிய மற்றும் பழைய பாசன கால்வாய் மூலம் கள்ளக்குறிச்சி, சின்னசேலம் வட்டத்தைச் சேர்ந்த சுமார் 11 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. விவசாயத்துக்காக அக்டோபர், நவம்பர் மாதங்களில் அணை திறக்கப்படுவது வழக்கம்.

அண்மையில் பெய்த மழையால் அணையில் தற்போது 38 அடி தண்ணீர் உள்ளது. அணையில் பழைய மதகு (ஷட்டர்) 4 ஆண்டுகளுக்கு முன்பு பழுதடைந்தது. இதனால் புதிய மதகு அமைக்கப்பட்டது. அதில் ஏற்பட்ட பழுது காரணமாக தண்ணீர் வீணாக வெளியேறியது.

இதைத் தொடர்ந்து பழுதை சரிசெய்து மதகை சீரமைப்பதற்காக, அணையில் இருந்து சனிக்கிழமை முதல் 200 கன அடி வீதம் தண்ணீர் ஆற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது. 25 அடியை தொடும் வரை தண்ணீர் வெளியேற்றிய பின்னரே மதகை சீரமைக்க முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து விவசாயிகள் சிலர் கூறுகையில், அணையில் நீர்மட்டம் குறைந்திருந்த காலத்தில் மதகுப் பழுதை சரிசெய்திருக்கலாம். ஆனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டம் வேகமாக உயரும் நிலையில், பழுதை சரி செய்வதற்காக தண்ணீர் வெளியேற்றப்படுவது வேதனையைத் தருகிறது என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**சென்னையில், நுங்கு விற்பனை அமோகம் ஒரு டஜன் ரூ.50-க்கு கிடைக்கிறது**



சென்னை,

கோடை வெயிலில் உடலுக்கு இதமளிக்கும் நுங்கு விற்பனை சென்னையில் தொடங்கி உள்ளது. ஒரு டஜன் ரூ.50-க்கு கிடைக்கிறது. இயற்கை தந்த நன்கொடைகோடை கால வெப்பத்தாக்கத்தில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள இயற்கை தந்த நன்கொடையில் நுங்கு முக்கிய பங்கு வகிக்கிறது உடல் சூட்டை தணித்து, வேர்குரு போன்ற கோடைகால தீங்குகளை நுங்கு போக்குகிறது. இத்தகைய கோடைகால வெயிலுக்கு அருமருந்தாக திகழும் நுங்கு விற்பனை சீசன் சென்னையில் தொடங்கி உள்ளது.மலைபோல் குவிப்புசென்னையில் கீழ்ப்பாக்கம், கோயம்பேடு, மாதவரம் உள்பட நகரின் பெரும்பாலான இடங்களில் 'நுங்கு' விற்பனை தொடங்கி உள்ளது. சாலையோர நடைபாதைகளில் மலைபோல குவித்து வைக்கப்பட்டு, விற்பனை மும்முரமாக இருந்து வருகிறது. வெப்பத்தில் இருந்து இதமளிப்பது மட்டுமின்றி, மருத்துவ குணங்களும் அதிகளவு இருப்பதால், பொதுமக்கள் ஆர்வத்துடன் நுங்குகளை வாங்கி செல்கின்றனர். மக்கள் கூட்டத்தை சமாளிப்பதற்காக சில இடங்களில் 5 அல்லது 6 பேர் குழுவாக அமர்ந்து நுங்குவை வெட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.1 டஜன் ரூ.50-க்கு விற்பனைஇதுகுறித்து நுங்கு வியாபாரி ஒருவர் கூறியதாவது:-இந்த ஆண்டு நுங்கு சீசன், கடந்த ஆண்டை காட்டிலும் சற்று தள்ளி வந்துள்ளது. சென்னை நகருக்கு காஞ்சீபுரம் மாவட்டத்தில் பனை மரங்கள் அதிகம் உள்ள கல்பாக்கம், வேடல், பெரியாநத்தம் உள்பட இடங்களில் இருந்து நுங்கு வரத்து இருக்கிறது.தற்போது நுங்கு சீசன் ஆரம்பக்கட்டத்தில் இருப்பதால் 1 டஜன் நுங்கு(12 எண்ணிக்கை) ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. நுங்கு வரத்து அதிகரித்தவுடன் விலை நிச்சயம் குறையும். இவ்வாறு அவர் கூறினார்.

**பால் பொருள் தொழிற்சாலைகள்**




**த**மிழ்நாட்டில் முன்பு குறைந்துகொண்டிருந்த பசு, எருமை, காளை, ஆடு போன்ற கால்நடைகளின் எண்ணிக்கை, இப்போது தமிழக அரசின் முயற்சியால் உயர்ந்து கொண்டு இருக்கிறது. எந்த ஒரு விவசாயி என்றாலும், அவனது வாழ்வின் ஒரு அங்கமாக திகழ்வது மாடுகள்தான். பல விவசாயிகளுக்கு மாடுகளை வளர்த்து, அதில் இருந்து கிடைக்கும் பாலை விற்பதுதான் வருமானத்தை தருகிறது. இன்னும் பலருக்கு விவசாய வருமானம் போதாத நிலையிலும், இயற்கை பொய்த்துப்போய் பயிர்கள் தகுந்த விளைச்சலைத்தராத நிலையிலும், இந்த பால்தான் வாழ்வாதாரத்துக்கு கைகொடுக்கிறது. இப்போது விவசாய இடுபொருட்கள் குறிப்பாக உரவிலை உயர்ந்துகொண்டே போவதாலும், ரசாயன உரங்களை ஆண்டுகணக்கில் பயன்படுத்தி, நிலமகளை மலடாக்கிய நிலை ஏற்பட்டதாலும், மக்களின் பார்வை இயற்கை விவசாயத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கும் நேரத்தில், இயற்கை உரத்தின் தேவை அதிகமாக இருக்கிறது. இயற்கை உரம் என்றால் அதற்கு மாட்டு சாணம்தான் முக்கியமானதாகும். இதுமட்டுமல்லாமல், ஜெயலலிதா ஏழை மக்களின் வாழ்வில் ஒளியேற்றும் ஒருதிட்டமாக இலவச கறவைப்பசு வழங்கும் திட்டத்தை அமலுக்கு கொண்டு வந்தபிறகு, கிராமங்களில் அனைத்து விவசாயிகளின் பார்வையும் மாடுகள் பக்கம் திரும்பிவிட்டது. 2011–12 முதல் 2015–2016 வரையில் தமிழ்நாடு முழுவதும் 60 ஆயிரம் இலவச கறவை பசுக்கள் வழங்கும் திட்டத்தை ஜெயலலிதா அறிவித்திருந்தார். திட்டமிட்ட இலக்கை

தமிழ்நாடு அடையப்போகிறது. இந்த ஆண்டு பட்ஜெட்டில்கூட 12 ஆயிரம் இலவச கறவை பசுக்கள் வழங்க பட்ஜெட்டில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசால் வழங்கப்பட்ட கறவை பசுக்கள் ஈன்றதால், ஆயிரக்கணக்கான கன்றுகளும் விவசாயிகளின் வீடுகளில் வளரும் நிலையில், இலவச பசுக்களை பெறாத விவசாயிகளும் இப்போது விலை கொடுத்து வாங்கத்தொடங்கிவிட்டனர்.தமிழ்நாடு முழுவதும் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களிடம் இருக்கும் மாடுகளின் பாலை கறந்து, தமிழக அரசுக்கு சொந்தமான ஆவின் நிறுவனத்துக்கும், மற்றும் தனியார் பால் நிறுவனங்கள், கூட்டுறவு பால் சங்கங்கள், வீடுகள், ஓட்டல்களில் விற்றுத்தான் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். தற்போது தமிழ்நாட்டில் தினமும் ஒரு கோடியே 25 லட்சம் லிட்டர் பால் விவசாயிகளால் விற்பனைக்கு தயாராக இருக்கிறது. இதில் ஏறக்குறைய 30 லட்சம் லிட்டர் பாலைத்தான் ஆவின் நிறுவனம் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்கிறது. தனியார் நிறுவனங்கள் விவசாயிகளிடம் இருந்து ஒரு லிட்டருக்கு ரூ.23–க்கு மட்டுமே கொள்முதல் செய்யும் நிலையில், ஆவின் நிறுவனம் மட்டும் ஒரு லிட்டர் ரூ.28–க்கு கொள்முதல் செய்வதால், விவசாயிகள் ஆவினுக்கு விற்றால்தான் தங்களுக்கு கட்டுபடியாகும் என படையெடுக்கிறார்கள். ஆவினுக்கும் இதற்குமேல் கொள்முதல் செய்யமுடியாத நிலை. ஏனெனில், 30 லட்சம் லிட்டரில், 22 லட்சம் லிட்டரை பொதுமக்களுக்கு பாலாக விற்பனை செய்துவிட்டு, 8 லட்சம் லிட்டரை பால் பவுடராகவும், தயிராகவும் மாற்றுகிறார்கள். ஆவினின் உற்பத்தித்திறன் அவ்வளவுதான். உற்பத்தி அதிகமாகிக்கொண்டிருக்கும் சூழ்நிலையில், தேவை குறைந்து விவசாயிகளிடம் பால் தேங்கிவிடக்கூடாது. எனவே, ஆவின் நிறுவனமும் தன் கொள்முதல் திறனையும், உற்பத்தி திறனையும் அதிகரிக்க முயற்சி செய்யவேண்டும். அதுபோல, பால் பொருட்களை உற்பத்தி செய்யும் வகையில் தனியாரும் அத்தகைய தொழிற்சாலைகளை பரவலாக தொடங்க ஊக்கம் அளிக்கவேண்டும். இதன்மூலம், கிராமப்பொருளாதாரத்தையும் மேம்படுத்தலாம், தொழிலையும் வளர்க்கலாம்.

**ஆழியாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு 6,400 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன**



ஆனைமலை,

ஆழியாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 6 ஆயிரத்து 400 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன.

<u>விவசாயிகள் கோரிக்கை</u>

ஆழியாறு அணையில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் மூலம் விவசாயம், குடிநீர் தேவை பூர்த்தியாகிறது. இதில் பழைய ஆயக்கட்டு பாசனத்தில் 6 ஆயிரத்து 400 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. 3 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களும், 3 ஆயிரத்து 400 ஏக்கரில் தென்னை, வாழை உள்பட பல்வேறு பயிர்களும் சாகுபடி செய்யப்படுகின்றன.

பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு ஆண்டு தோறும் மே மாதம் 15–ந் தேதி தண்ணீர் திறக்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த ஆண்டு தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் சிக்கி நாசமாகின. எனவே இந்த ஆண்டு சரியான நேரத்தில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

<u>தண்ணீர் திறப்பு</u>

இதைத்தொடர்ந்து ஆழியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க முதல்–அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் உத்தரவிட்டார். இதன்படி நேற்று மாலை 3 மணிக்கு ஆழியாறு அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கும் நிகழ்ச்சி நடந்தது. நிகழ்ச்சிக்கு சப்–கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே தலைமை தாங்கி, தண்ணீரை திறந்து வைத்தார். தொடர்ந்து பாய்ந்து ஓடிய தண்ணீர் மீது மலர் தூவப்பட்டது. நிகழ்ச்சிக்கு கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன், செயற்பொறியாளர் சுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் கருணாகரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஆழியாறு சிறுபுனல் மின் நிலையம் வழியாக திறக்கப்பட்டுள்ள தண்ணீரினால் 1.25 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ந் தேதி வரை தண்ணீர் திறந்து விடப்படும். இது குறித்து பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் இளங்கோவன் கூறியதாவது:–

பழைய ஆயக்கட்டு பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்கும் ஆழியாறு அணையில் இருந்து வினாடிக்கு 150 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப கூடுதலாக தண்ணீர் திறக்கப்படும். இதன் மூலம் 6 ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.இவ்வாறு அவர் கூறினார்.தண்ணீர் திறப்பு நிகழ்ச்சியில் உதவி பொறியாளர்கள் முருகேசன், மாரிமுத்து, சின்னராஜ் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**தொடர் மழையின் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தது செவ்வாழை ரூ.900–த்துக்கு விற்பனை**



தொடர் மழையின் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழைத்தார் வரத்து குறைந்தது. செவ்வாழை ரூ.900 வரை விற்பனை ஆனது.

வாழைத்தார் ஏலம்

பொள்ளாச்சி மார்க்கெட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மற்றும் புதன் கிழமைகளில் வாழைத் தார் ஏலம் நடைபெற்று வருகிறது. இந்த ஏலத்துக்கு பொள்ளாச்சி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் இருந்தும், தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் வாழைத்தார்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு செவ்வாழை, மோரீஸ், பூவந்தார், கற்பூர வள்ளி, சாம்பூராணி, நேந்திர பழம், கதளி போன்ற அனைத்து வகையான வாழைத்தார்கள் ஏலம் விடப்படுகின்றன.

இந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை என்பதால் மார்க்கெட்டில் வாழைத்தார் ஏலம் நடை பெற்றது. ஏலத்துக்கு பல்வேறு இடங்களில் இருந்து சுமார் 1000 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டன. ஏலத் தில் அதிகபட்சமாக பூவந்தார் ரூ.250 முதல் ரூ.450 வரைக்கும், செவ்வாழை ரூ.300–900, மோரீஸ் ரூ.150–400, நேந்திரம் கிலோ ரூ.27–க்கும், சாம்பூராணி ரூ.200 முதல் ரூ.520, கேரளா ரஸ்தாலி கிலோ ரூ.17–க்கும் ஏலம் போனது.

வரத்து குறைந்தது

இது குறித்து வாழைத்தார் வியாபாரி ஒருவர் கூறிய தாவது:–

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த ஏலங்களில் வாழைத்தார் வரத்து அதிகரித்து இருந்தது. சுமார் 1500 வாழைத்தார்கள் வரை விற்பனைக்கு வந்தன. ஆனால் நேற்று நடந்த ஏலத்துக்கு சுமார் 1000 வாழைத்தார்கள் வந்தன. தொடர் மழையின் காரணமாக வாழைத்தார் வரத்து குறைந்து இருந்தது. வரத்து குறைவால் விலை அதிகரித்து காணப்பட்டது.

இவ்வாறு அவர் கூறினார்.

**வால்பாறையில் தொடர் மழை: சோலையார் அணையின் நீர்மட்டம் அதிகரிப்பு 16 நாளில்18 அடி உயர்ந்தது**



வால்பாறை பகுதியில் தொடர் மழை பெய்வதால் சோலையார் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. 16 நாளில் 18 அடி அதிகரித்துள்ளது.

தொடர் மழைவால்பாறை பகுதியில் வழக்கத்திற்கு மாறாக கோடைகாலத்திலும் கன மழை பெய்து வருகிறது. தொடர் மழையினால் மலைப்பகுதி முழுவதும் பச்சைபசேல் என்று காணப்படுகிறது. இதனால் கோடை கால வறட்சியில் இருந்து வால்பாறை பகுதி தப்பித்துக்கொண்டது. கோடை காலத்தில் அடிக்கடி காட்டுத்தீ ஏற்படும். ஆனால் இந்த ஆண்டு மழை பெய்து வருவதால் காட்டுத்தீ ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை.மேலும் ஏப்ரல், மே மாதங்களில் அனைத்து ஆறுகளும் வறண்டு எஸ்டேட் பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படும். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இறுதியில் இருந்து அவ்வப்போது மழை பெய்து வருகிறது. மழையினால் அனைத்து ஆறுகளிலும் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.சோலையார் அணைபரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் அடிப்படை அணையான சோலையார் அணையின் நீர்மட்டம்

ஏப்ரல் மாத இறுதியில் வெறும் 5 அடியாக (மொத்த கொள்ளளவு 160 அடி) இருந்தது. கடந்த 1-ந் தேதி 6 அடியாக இருந்த சோலையார் அணையின் நீர் மட்டம் தற்போது எதிர்பாராதவிதமாக பெய்யும் மழை காரணமாக கிடு, கிடுவென உயர்ந்து நேற்று 24 அடியை எட்டியது. கடந்த 16 நாட்களில் அணையின் நீர்மட்டம் 18 அடி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது ஆகும்.மேலும் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளுக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது. இன்னும் சில நாட்களில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இந்த ஆண்டு சோலையார் அணை விரைவில் நிரம்புவதற்கு வாய்ப்புள்ளது. மேலும் மின் உற்பத்தி அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.28 மி.மீ. மழை நேற்று காலை நிலவரப்படி சோலையார் அணைக்கு வினாடிக்கு 194 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை. மேலும் அணை பகுதியில் 28 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. இதே போன்று பொள்ளாச்சி, ஆனைமலை, ஆழியாறு பகுதியிலும் மழை பெய்வதால் ஆழியாறு அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்து வருகிறது.

**சிதம்பரம் பகுதியில் கோடை மழை கொட்டித்தீர்த்தது விவசாயிகள் மகிழ்ச்சி**



சிதம்பரம் பகுதியில் கோடை மழை கொட்டித்தீர்த்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கடலூரில் குளிர்ந்த காற்று வீசியது

கடலூர் மாவட்டத்தில் கடந்த 6 நாட்களாக பரவலாக கோடை மழை பெய்துவருகிறது. குறிப்பாக கடலோர பகுதிகளான கடலூர், பரங்கிப்பேட்டை, சிதம்பரம் போன்ற பகுதிகளில் அதிக மழை பெய்துள்ளது. கடலூரில் கடந்த 5 நாட்களாக மழை பெய்தது. 6–வது நாளான நேற்று காலையிலேயே வானம் இருண்டு கொண்டு குளிர்ந்த காற்று வீசியது. ஆனால் மழை பெய்யவில்லையென்றாலும் மாலை வரை வானம் மப்பும் மந்தாரமுமாக, குளிர்ந்த காலநிலையே நிலவியது.

சிதம்பரத்தில் பலத்தமழை

சிதம்பரத்தில் கடந்த சில நாட்களாக கோடை மழை பெய்து வருகின்றது. நேற்று காலை 9 மணிக்கு வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்தன. அதனை தொடர்ந்து சிறிது நேரத்தில் பலத்த மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை பிற்பகல் 3 மணி வரை விட்டு, விட்டு பெய்தது. இதனால் சிதம்பரத்தில் உள்ள முக்கிய சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் தாழ்வான பகுதிகளில் மழை நீர் குளம் போல் தேங்கியது. முன் எப்போதும் இல்லாத வகையில் இப்போது சிதம்பரம் பகுதியில் தொடர்ந்து கோடை மழை பெய்து வருகிறது. இந்த மழையானது, அடுத்த மாதம் குறுவை சாகுபடிக்காக கோடை உழவு செய்து நிலத்தை தயார் படுத்த உதவியாக இருக்கும் என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேப்போல் காட்டுமன்னார்கோவில், குமராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் காலை 6 மணி முதல் பெய்ய தொடங்கிய மழையானது பிற்பகல் 3 மணி வரை அவ்வபோது விட்டு விட்டு பெய்தது. இதன் காரணமாக சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

புவனகிரி நெடுஞ்சாலை பகுதியான கீழ்புவனகிரி, பஸ் நிலையம், பயணியர்விடுதி, முத்தாட்சி பிள்ளையார்கோயில்தெரு, கடைவீதி ஆகிய பகுதிகளில் மழைநீர் தேங்கியது. இதனால் பொதுமக்கள் சாலைகளில் நடமாடமுடியாமல் பெரும்அவதிக்குள்ளாகின்றனர்.மேலும் இதை பார்த்த நெடுஞ்சாலைத் துறையினர் சாலைபணியாளர்கள் மூலம் தேங்கி நின்ற மழைநீரை சீரமைத்து மழைநீரை வடியவைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

மழை அளவு

மாவட்டத்தில் நேற்று காலை 8–30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக புவனகிரியில் 40 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது. இதேப்போல் அண்ணாமலை நகரில் 23.6 மி.மீ., பரங்கிப்பேட்டையில் 23 மி.மீ., சிதம்பரத்தில் 22 மி.மீ., கொத்தவாச்சேரியில் 20 மி.மீ., சேத்தியாத்தோப்பில் 17.4 மி.மீ., காட்டுமன்னார்கோவிலில் 5 மி.மீ., லால்பேட்டையில 1..5 மி.மீ. மழை பெய்துள்ளது. இந்த மழையால் மாவட்டத்தில் கோடை வெப்பம் தணிந்து குளிர்ச்சியான காலநிலை நிலவுகிறது.

**காஞ்சீபுரத்தில் பலத்த மழை**



காஞ்சீபுரம்,


காஞ்சீபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று பலத்த மழை பெய்தது. வண்டலூர், பள்ளிப்பட்டு, பெரியபாளையம், ஸ்ரீபெரும்புதூர் பகுதிகளில் லேசான மழை பெய்தது.

**மதுரையில் பலத்த மழை மேலூரில் 33 மில்லி மீட்டர் பதிவு**

ராமநாதபுரம் மாவட்டத்தில் நேற்று காலை முதல் மேகமூட்டமாக காணப்பட்டது. வெயில் தெரியாத நிலையில் இருந்து வந்தது. இந்தநிலையில் மதியம் சுமார் 2மணியளவில் திடீரென்று மழை கொட்டி

தீர்த்தது. ஒரு மணிநேரம் நீடித்த இந்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. பலத்த மழை காரணமாக பாம்பன் பகுதியில் இருந்து நாட்டுப்படகு மீனவர்கள் நேற்று மீன்பிடிக்க கடலுக்குச் செல்லவில்லை.சிவகங்கை மாவட்டத்திலும் மதியத்துக்கு மேல் மழை பெய்தது. பெரிய அளவில் மழை இல்லை என்றாலும் தொடரந்து தூறல் ஆக இருந்தது. காரைக்குடி உள்ளிட்ட மாவட்டங்களில் பல இடங்களில் இதே நிலை நீடித்தது. விருதுநகர் மாவட்டத்தில் மேகக்கூட்டங்களாக காணப்பட்டன. லேசான தூறல் மழை பெய்தது. வெயில் காணப்படாததால் சற்று குளிர்ச்சியாக இருந்தது.மதுரை நகரில் நேற்று காலை 9 மணிக்குமேல் வெயில் ‘சுள்’ என்று அடித்தது. ஆனால் பகல் 12 மணிக்கு மேல் நிலைமை மாறி மேகக் கூட்டங்கள் திரண்டு நின்றன. மாலை 3மணி அளவில் இடி, மின்னலுடன் காற்று இல்லாமல் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.மேலூர் பகுதியில் நேற்று மாலை 4 மணி அளவில் திடீரென காற்றுடன் பலத்த மழை பெய்தது. அழகர்மலை அடிவாரத்தில் உள்ள கிடாரிப்பட்டி, செட்டியார்பட்டி, அ.வள்ளாலபட்டி, மேலவளவு, கேசம்பட்டி, தும்பைபட்டி, மேலூர், கல்லம்பட்டி, சூரக்குண்டு ஆகிய ஊர்களில் பலத்தமழை பெய்தது. மேலூர் பகுதியில் நேற்று 33 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி தொடர் சரிவு கடந்த ஆண்டை காட்டிலும் நாள் ஒன்றுக்கு 13 லட்சம் குறைந்தது**



நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி தொடர்ந்து சரிவடைந்து கொண்டே வருகிறது. கடந்த நிதி ஆண்டை ஒப்பிடும் போது இந்த ஆண்டில் நாள்ஒன்றுக்கு ஏறத்தாழ 13 லட்சம் முட்டைகள் உற்பத்தி குறைந்து உள்ளது. முட்டை உற்பத்தி தொடர் சரிவு நாமக்கல் மண்டலத்தில் 1,100-க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு ஏறத்தாழ 5 கோடி முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. ஆனால் 2013-2014-ம் நிதியாண்டு முதல் தொடர்ந்து முட்டை உற்பத்தி சரிவை சந்தித்து வருகிறது.

தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின் படி, நாமக்கல் மண்டலத்தில் கடந்த 2007-08-ம் நிதி ஆண்டில் நாள் ஒன்றுக்கு 2 கோடியே 14 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன. அது 2008-09-ம் ஆண்டில் 2 கோடியே 43 லட்சமாகவும், 2009-10-ம் நிதி ஆண்டில் 3 லட்சம் முட்டைகள் குறைந்து 2 கோடியே 40 லட்சமாக இருந்தது. இருப்பினும் 2010-2011-ம் ஆண்டில் 2 கோடியே 94 லட்சமாகவும், 2012-13-ல் 3 கோடியே 46 லட்சமாகவும் உயர்ந்தது. 13 லட்சம் குறைந்தது இவ்வாறு தொடர்ச்சியாக முட்டையின் உற்பத்தி அதிகரித்து வந்த நிலையில், 2013-14-ம் ஆண்டில் ஏறத்தாழ 20 லட்சம் முட்டைகள் திடீரென உற்பத்தி குறைந்து, ஒரு நாளின் முட்டை உற்பத்தி 3 கோடியே 26 லட்சமாக சரிவடைந்தது. தற்போது அதாவது 2014-15-ம் நிதி ஆண்டில் முட்டை உற்பத்தி மேலும் நாள்ஒன்றுக்கு 13 லட்சம் குறைந்து, 3 கோடியே 13 லட்சமாக சரிவடைந்து உள்ளது. இதேபோல் முட்டையின் கொள்முதல் விலை கடந்த 2010-11-ம் ஆண்டில் 249 காசுகளாகவும், 2011-12-ம் ஆண்டில் 259 காசுகளாகவும், 2012-13-ம்ஆண்டில் 309 காசுகளாகவும், 2013-14-ம் ஆண்டில் 335 காசுகளாகவும் உயர்ந்து கொண்டே வந்தது. இந்த நிலையில் 2014-15-ம் நிதியாண்டில் ஏறத்தாழ 29 காசுகள் குறைந்து 306 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. பண்ணையாளர்கள் கவலைமுட்டை உற்பத்தி குறைந்து கொண்டே வருவதற்கு, மூலப்பொருட்களின் விலை ஏற்றம் காரணமாக தொழிலில் ஏற்பட்டு வரும் நஷ்டத்தை தவிர்க்க குஞ்சு விடுவதை

பண்ணையாளர்கள் குறைத்து கொண்டதுதான் முக்கிய காரணம் என கூறப்படுகிறது. முட்டை உற்பத்தி குறைந்து கொண்டே வரும் நிலையில், அதன் கொள்முதல் விலையும் சரிவடைந்து உள்ளதால், பண்ணையாளர்கள் கவலை அடைந்து உள்ளனர்.

**மலர் கண்காட்சிக்கு தயாராகும் ஏற்காடு சுற்றுலா பயணிகள் உற்சாக படகு சவாரி**



ஏற்காடு சுற்றுலா தலம் மலர் கண்காட்சிக்கு தயாராகி வருகிறது. நேற்று விடுமுறை தினம் என்பதால் ஏராளமான சுற்றுலா பயணிகள் உற்சாகமாக படகு சவாரி செய்தனர்.மலர் கண்காட்சிசேலம் மாவட்டத்தில், பிரசித்தி பெற்ற கோடை வாசஸ்தலமான ஏற்காட்டில் ஆண்டுதோறும் மே அல்லது ஜூன் முதல் வாரத்தில் கோடை விழாவையொட்டி மலர் கண்காட்சி நடத்தப்படும். ஏற்காட்டின் மையப்பகுதியாக அமைந்துள்ள அண்ணா பூங்காவில் தான் இந்த மலர் கண்காட்சி 3 நாட்கள் நடத்தப்படும். இந்த ஆண்டு, அடுத்த மாதம் (ஜூன்) முதல் வாரத்தில் 3 நாட்கள் மலர் கண்காட்சியை நடத்த அதிகாரிகள் திட்டமிட்டு வருகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை துரிதமாக செய்து வருகின்றனர். குறிப்பாக அண்ணா பூங்காவில் ரோஜா உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட மலர் ரகங்களின் ஏராளமான மலர்தொட்டிகள் சுற்றுலா பயணிகளின் பார்வைக்காக

வைக்கப்பட உள்ளன. இது மட்டுமின்றி, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தோட்டக்கலைத்துறை, வனத்துறை சார்பில் பல்வேறு படைப்புகள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன. மேலும், ஏராளமான சுற்றுலா பயணிகளை கவரும் வகையில், மகளிர் சுயஉதவிக்குழுவினரின் உற்பத்தி பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சியும், பல்வேறு விதமான கலை நிகழ்ச்சிகளும் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.படகு சவாரிஇதையொட்டி மலர்க்கண்காட்சியில் வைக்கப்பட உள்ள மலர் தொட்டிகள் பதியம் போட்டு வளர்க்கும் பணி ஐந்திணை பூங்காவில் ஏற்கனவே நடைபெற்றது. தற்போது அந்த பூங்காவில் செடிகள் பூக்க தொடங்கி உள்ளன. இவ்வாறு பதியம் போட்ட செடிகளுடன் கூடிய மலர் தொட்டிகள் இந்த மாத இறுதிக்குள் அண்ணா பூங்காவில் வைக்கப்பட உள்ளதாக தோட்டக் கலைத்துறையினர் தெரிவித்தனர். இதனிடையே கோடை விடுமுறையையொட்டி கடந்த ஒரு வாரமாக ஏற்காட்டிற்கு சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்பட்டது. நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால், சுற்றுலா பயணிகள் வருகை அதிகரித்து காணப்படுகிறது. குறிப்பாக காலை முதல் மாலை வரை வானம் மேகமூட்டத்துடன் குளு,குளு சூழல் நிலவியது சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது. இதனால் ரோஜா தோட்டத்தில் நேற்று ஒரே நாளில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்தனர். கார் மற்றும் இருசக்கர வாகனங்களில் செல்வோர் சுற்றுலா தலத்தில் தங்கள் செல்போன்களில் ‘செல்பி‘ புகைப்படமும் எடுத்துக்கொண்டனர். இதேபோல் படகு சவாரியும் களை கட்டியது. ஏராளமான சுற்றுலா பயணிகள் தங்கள் குடும்பத்தினருடன் உற்சாகமாக படகு சவாரி செய்தனர்.

**தொடர்ந்து மழை பெய்வதால் பொதுமக்கள் மகிழ்ச்சி**



சிவகங்கை மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் கோடை மழையால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்து வருகின்றனர்.

<u>கோடை மழை</u>

அக்னி நட்சத்திரம் தொடங்கியதில் இருந்தே சிவகங்கை மாவட்டத்தில் வெயில் காணமுடியாத அளவிற்கு மழை பெய்து வருகிறது. மாவட்டம் முழுவதும் பகல் நேரங்களில் வானம் மேகமூட்டத்துடன் குளிர்ந்த காற்று வீசிவருகிறது. நேற்று மதியத்திற்கு மேல் சிவகங்கை நகரில் சுமார் 5 நிமிடங்கள் மழை பெய்தது. தொடர்ந்து மேகமூட்டத்துடன் சிறிய தூறலாக காணப்பட்டது.

மானாமதுரை பகுதியில் நேற்று காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இதையடுத்து மதியம் 12.30 மணி முதல் 1.30 மணி வரை இடியுடன் கூடிய கனமழை பெய்தது. இந்த மழையினால் பொதுமக்கள் விவசாயிகள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். இந்த மழையினால் தாழ்வான இடங்களான மானாமதுரை சுந்தரபுரம் கடைவீதி, சிவகங்கை ரோடு, குண்டுராயர் வீதி ஆகிய இடங்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மானாமதுரை, முத்தனேந்தல் மற்றும் அதனைச் சுற்றி உள்ள பகுதிகளில் விட்டு விட்டு சாரல் மழை பெய்துகொண்டிருந்தது.

<u>பொதுமக்கள் மகிழ்ச்சி</u>

காரைக்குடி, தேவகோட்டை, திருப்பத்தூர் உள்ளிட்ட இடங்களில் காலை முதலே நேற்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. வெயில் தாக்கம் இல்லாமல் தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசியது. காரைக்குடியில் காலை முதலே வானம் மேகமூட்டத்துடன் அவ்வப்போது குளிர்காற்றுடன் சாரல் தூறிக்கொண்டே இருந்தது.

கடந்த சில நாட்களாக கோடைமழை மற்றும் வானம் மேகமூட்டத்துடன் இருப்பதால் மாவட்டத்தில் வெயிலின் தாக்கம் இல்லாமல் இருந்தது. இதனால் வயதான தம்பதிகள் முதல் குழந்தைகள் வரை அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

**திருவாரூர் மாவட்டத்தில் பலத்த மழை திருத்துறைப்பூண்டியில் அதிகபட்சமாக 93 மில்லி மீட்டர் பதிவானது**



திருவாரூரில் நேற்று பெய்த பலத்த மழை காரணமாக தெற்கு வீதியில் மழை நீர் குளம்போல் தேங்கி நிற்பதை படத்தில் காணலாம்.

திருவாரூர் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. திருத் துறைப்பூண்டியில் அதிகபட்சமாக 93 மில்லி மீட்டர் பதிவானது.வெயிலை மிஞ்சிய மழை அக்னி நட்சத்திரம் தொடங்குவதற்கு முன்னதாக திருவாரூர் மாவட்டத்தில் வெயில் வாட்டி வதைத்தது. ஆனால் அக்னி நட்சத்திரம் தொடங்கியதும், வெயிலை மிஞ்சும் விதமாக மழை பெய்ய தொடங்கியது. மாவட்டம் முழுவதும் கடந்த 2 வாரங் களாக மழை காலம் போல் பர வலாக மழை பெய்து வருகிறது. கடந்த 4-ந் தேதி முதல் விட்டு, விட்டு பெய்து வந்த மழை கடந்த 3 நாட்களாக தீவிரமாக பெய்தது. நேற்று திருவாரூரில் அதி காலையில் இருந்தே மழை பெய்ய தொடங்கி விட்டது. இந்த மழை மாலை வரை கொட்டி தீர்த்தது. திருத்துறைப் பூண்டி,

முத்துப்பேட்டை, கோட்டூர் மற்றும் அதன் சுற்று வட்டார பகுதி கிராமங்களில் நேற்றுமுன்தினம் இரவு 11 மணி அளவில் பெய்ய தொடங்கியது. இப்பகுதிகளில் நேற்று மதியம் வரை மழை பெய்தது. இதேபோல் குட வாசல், நன்னிலம், நீடாமங் கலம் பகுதிகளிலும் நேற்று பர வலாக பலத்த மழை காணப்பட்டது. மழை நிலவரம் திருவாரூர் மாவட்டத்தில் நேற்று காலை 8½ மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் திருத்துறைப் பூண்டியில் அதிகபட்சமாக 93 மில்லி மீட்டர் மழை பதிவா னது. மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு விவரம் மில்லி மீட்டர் அளவுகளில் வருமாறு:- முத்துப்பேட்டை-41, குடவாசல்-34, நன்னிலம்-14, திருவாரூர்-8, பாண்டவை யாறு தலைப்பு-7, நீடாமங்க லம்-4, வலங்கைமான்-4. மாவட்டம் முழுவதும் சராசரியாக 23 மில்லி மீட்டர் மழை பதிவானது குறிப்பிடத் தக்கது.பயிர்கள் பாதிப்புகோடை காலத்தில் தொடர்ந்து நீடித்து பெய்யும் மழை வெயிலின் தாக்கத்தை தணித்து மகிழ்ச்சியை தந்தா லும் பருத்தி, பயறு போன்ற கோடை கால பயிர்களை சாகுபடி செய்த விவசாயிகளை கலக்கம் அடைய செய்து இருக்கிறது.

**திருவள்ளூர், பேரம்பாக்கத்தில் பலத்த மழை**



திருவள்ளூர் மாவட்டம் திருவள்ளூர் காக்களூர், ஈக்காடு, அரண்வாயல், செவ்வாப்பேட்டை, வெள்ளவேடு, திருப்பாச்சூர், கடம்பத்தூர், மப்பேடு, பேரம்பாக்கம், கீழச்சேரி, பண்ணூர், திருவாலங்காடு மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று காலை பலத்த மழை பெய்தது.

இதனால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. காஞ்சீபுரம் மாவட்டத்தில் பலத்த மழை பெய்தது. இதனால் கோடை வெப்பம் தணிந்து மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். காஞ்சீபுரம் மாவட்டத்தில் பெய்த மழை அளவு விவரம் வருமாறு:- செங்கல்பட்டு -68.70 மி.மீ., மாமல்லபுரம்-42.20. மி.மீ., திருக்கழுக்குன்றம் -40.20 மி.மீ., உத்திரமேரூர் - 24 மி.மீ., காஞ்சீபுரம் - 13.30 மி.மீ., மதுராந்தகம் -10 மி.மீ., ஸ்ரீபெரும்புதூர் - 8.40 மி.மீ., தாம்பரம் -2 மி.மீ. ஆகும்.

**கள்ளக்குறிச்சியில் இடி, மின்னலுடன் பலத்த மழை**



கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்நிலையில் நேற்று காலை முதல் மாலை வரை கள்ளக்குறிச்சியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. தொடர்ந்து, மாலை 6 மணியளவில் திடீரென இடி, மின்னலுடன் பெய்ய தொடங்கிய மழை இரவு 7 மணி வரை பலத்த மழையாக கொட்டித் தீர்த்தது. இதனால் கள்ளக்குறிச்சி நகரில் தாழ்வான பகுதிகளான பஸ் நிலையம், நான்கு முனை சந்திப்பு, காந்தி சாலை, சேலம் சாலை, துருகம்

சாலை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் மழைநீர் ஆறாக ஓடியது. தொடர் மழையால் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**உளுந்தூர்பேட்டையில் பலாப்பழம் விற்பனை மும்முரம்**



உளுந்தூர்பேட்டையில் பலாப்பழம் விற்பனை மும்முரமாக நடைபெற்று வருகிறது.

சாலையோர கடைகள்

சென்னையில் இருந்து திருச்சி, சேலம் வழியாக பிற ஊர்களுக்கு செல்பவர்கள் உளுந்தூர்பேட்டைக்கு வந்து தான் செல்லவேண்டும். அதேபோல் சென்னையில் இருந்தும், திருச்சி, சேலத்தில் இருந்தும் தொடர் பயணம் செய்பவர்களுக்கு ஓய்வு எடுக்க வேண்டிய சரியான தூரத்தில் உளுந்தூர்பேட்டை அமைந்துள்ளது. பெரிதாக தொழில்வளம் இல்லாத இந்த ஊரில் பெரும்பாலான மக்கள் வாகன போக்குவரத்தை கருத்தில் கொண்டு ஓட்டல் மற்றும் பழங்கள் வியாபாரத்தையே தொழிலாக செய்து வருகின்றனர். இதனால் தற்போது உளுந்தூர்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் உணவு விடுதிகளும், சாலையோர பழக்கடைகளும் அதிக அளவில் உருவாகியுள்ளது. இந்தநிலையில் செங்குறிச்சி கிராமத்தை சேர்ந்த 200–

க்கும் மேற்பட்ட பெண்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் தற்போது உளுந்தூர்பேட்டை சுங்க சாவடி சாலைகளின் இரு புறங்களிலும் கடைகளை போட்டு பழ வியாபாரத்தை தொடங்கியுள்ளனர்.

பலாப்பழம் விற்பனை

இங்கு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மா, பலா, கொய்யா, வாழை உள்ளிட்ட பழங்களை குவியல், குவியலாக சாலையில் வைத்து வியாபாரம் செய்கின்றனர். தற்போது பழாப்பழம் சீசன் என்பதால் வியாபாரிகள் பட்டுக்கோட்டை, பண்ருட்டி பகுதிகளில் இருந்து பலாப்பழங்களை வாங்கி வந்து விற்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். சுமார் 15 கிலோ எடையுள்ள ஒரு பலாப்பழம் ரூ.200 முதல் ரூ.350 வரை விற்பனை செய்யப்படுகிறது. இங்கு விற்பனை செய்யப்படும் இந்த பழங்களை பல்வேறு ஊர்களில் இருந்து கார் மற்றும் பஸ்களில் வரும் பயணிகள் அதிக அளவில் ஆர்வம் காட்டி வாங்கி செல்கின்றனர்.

தினகரன்

**மேகதாது அணை விவகாரம் ஜூன் 6ல் ஜனாதிபதியுடன் விவசாயிகள் சந்திப்பு**




திருத்துறைப்பூண்டி : அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக்குழு தலைவர் பி.ஆர்.பாண்டியன் நேற்று திருத்துறைப்பூண்டியில்

நிருபர்களிடம் கூறியதாவது: காவிரியின் குறுக்கே அணைகட்டும் கர்நாடக அரசின் முயற்சியை தடுத்து நிறுத்த வேண்டும். நடுவர்மன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில் காவிரி மேலாண்மை வாரியம் நீர் பங்கீட்டு ஒழுங்காற்றுக்குழுவை அமைக்காமல் காலங்கடத்தி வரும் மத்திய அரசுக்கு உரிய அறிவுறுத்தல் செய்திட வேண்டும் என்று காவிரி டெல்டா விவசாயிகள் வருகிற 6ம்தேதி ஜனாதிபதியை நேரில் சந்தித்து முறையிட உள்ளோம். கர்நாடக முதலமைச்சரும், சட்டத்துறை அமைச்சரும் காவிரியில் புதிய அணை கட்டுமானப்பணிக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளதாக கருத்துக்களை தெரிவித்து வருகின்றனர். ஆனால் இதற்கு மத்திய அரசு மறுப்பு தெரிவிக்காத நிலையில் இதில் உள்ள குழப்பத்தை தெளிவுபடுத்தவேண்டும் என்றும் ஜனாதிபதியிடம் வலியுறுத்துவோம். தமிழகத்தில் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும் வருகிற 26ம்தேதி சென்னையில் நிலம் கையகப்படுத்தும் சட்டத்தை எதிர்த்து அனைத்து விவசாயிகள் சங்கம் சார்பில் நடத்தவிருந்த உண்ணாவிரதப் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. பின்னர் வேறொரு தேதியில் இந்த போராட்டம் நடைபெறும். கூட்டுறவு சங்கங்கள் ஜப்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதை தமிழக அரசு தடுத்து நிறுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மேட்டூருக்கு நீர்வரத்து அதிகரிப்பு**




மேட்டூர் : நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2248 கனஅடியாக அதிகரித்தது. தமிழகத்தில்

கடந்த ஒரு வாரமாக பரவலாக கோடை மழை பெய்து வருகிறது. காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில், கனமழை பெய்ததால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் காலை வினாடிக்கு 1403 கனஅடி வீதம் வந்து கொண்டிருந்த நீர்வரத்து, நேற்று காலை 2248 கனஅடியாக அதிகரித்தது. அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 500 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. நேற்று முன்தினம் 67.25 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம், நேற்று 67.41 அடியாக உயர்ந்தது. அணையில் நீர் இருப்பு 30.51 டிஎம்சி.

**ஊட்டி மலர் கண்காட்சி நிறைவு**



ஊட்டி : கோடை விழாவின் முக்கிய நிகழ்ச்சியான 119வது மலர் கண்காட்சி கடந்த 15ம் தேதி ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் துவங்கியது. கண்காட்சியையொட்டி, பலவிதமான அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. குறிப்பாக, மலர்களால் உருவாக்கப்பட்ட தாஜ்மகால், யானை உள்ளிட்டவை சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தது. 3 நாள் நடந்த மலர் கண்காட்சி நேற்றுடன் நிறைவடைந்தது. நிறைவு தினமான நேற்று ஏராளமான சுற்றுலா பயணிகள் ஊட்டியில் குவிந்தனர். கண்காட்சியை 84,500 ஆயிரம் பேர் பார்வை யிட்டுள்ளனர்.

**தமிழகத்தில் பலத்த காற்று**




நாகர்கோவில் : தமிழகத்தில் பல்வேறு இடங்களிலும், கடலோர மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. தற்போது, தமிழக, கேரள கடல் பகுதியில் வரும் 2 நாட்களுக்கு மணிக்கு 55 கி.மீ வேகத்தில் பலத்த கடற்காற்று வீசும் என்று இந்திய கடல் தகவல் சேவை மையம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதுதொடர்பான அறிவிப்பில்'தென் தமிழகத்தில் குமரி மாவட்டம் குளச்சல் முதல் ராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை வரையிலான கடல் பகுதியில் வரும் 19ம் தேதி வரை கடலோர பகுதிகளில் மணிக்கு 44 முதல் 55 கி.மீ வேகத்தில் தென்மேற்கு திசையில் இருந்து பலத்த கடற்காற்று வீசும். கடல் பரப்பில் 8 முதல் 10 அடி உயரத்துக்கு ராட்சத அலைகள் எழவும் வாய்ப்பு உள்ளது.